பக்கங்கள்-16 | 07.தை.2024 | விலை-50.00




# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 428




## ஜனாதிபதி ரணில் ஒரு இராஜதந்திர நரி - வடபகுதி விஜயம் சொல்லும் செய்தி என்ன?

## 2024 : வெற்றி ஆண்டா? தோல்வி ஆண்டா?

## தொல்லியலில் மதமும் அரசியலும்... சட்டம் சொல்வதென்ன?

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# ஜனாதிபதி ரணில் ஒரு இராஜதந்திர நரி - வடபகுதி விஜயம் சொல்லும் செய்தி என்ன?



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடபகுதிக்கான விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படும் அதேவேளை இவரது வருகைக்கு கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்ட உறவுகளினால் கடுமையான எதிர்ப்பு நடவடிக்கையும் காட்டப்பட்டுள்ளது. வவுனியாவில் கடுமையான எதிர்ப்பு நடவடிக்கை செய்யப்பட்டது. யாழ்ப்பாணத்தில் சட்டத்தரணி சுகாஸ் அவர்களால் தனது ஆதரவாளர்களைத் திரட்டி எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எது எவ்வாறாகவிருந்தாலும் ஜனாதிபதியின் வடக்குக்கான விஜயத்தின் நோக்கம் எவ்வாறானது என்பது குறித்துப் பார்க்கவேண்டியிருக்கிறது.

முதலாவதாக வரப்போகின்ற ஜனாதிபதித் தேர்தலில் தான் எவ்வாறு வெற்றி பெறுவது என்கிற முனைப்புடன் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் செயற்படுகின்றார். தேர்தல் காலங்கள் நெருங்குகின்றவேளையில் நாடு முழுவதும் விஜயம் செய்வது, மக்களின் பிரச்சினைகள் குறித்து சந்திப்புக்களை நடாத்தி கலந்துரையாடுவது. அந்த இடத்திலேயே இருந்து தொலைபேசியில் அரச திணைக்களங்களின் அதிகாரிகளுடன் உரையாடுவது, உடனடியாகத் தீர்வுகளை வழங்குவது போன்று பாசாங்கு செய்வது, வாக்குறுதிகளை அள்ளிவீசுவது என்பதெல்லாம் வழமையான நடவடிக்கைகள் என்பது மக்களுக்கு நன்கு தெரியும். ஆகவே இந்த குள்ளநரித்தனமான விடயங்களைப் பேசிச் செல்வதற்காகவே தனது தேவையின் நிமித்தம் அரச படைப் பட்டாளங்களுடன் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவுக்கு வந்து சென்றிருக்கிறார் ஜனாதிபதி.

நாட்டினை அபிவிருத்தி செய்யவேண்டும், வடக்கு மாகாணத்தினை கல்வி மற்றும் பொருளாதார ரீதியாக முன்னேற்றவேண்டும். இந்த நாட்டுக்கு வடக்கு மாகாணத்தின் பொருளாதாரமும் அவசியம், விவசாயிகள் மீதான கரிசணை, நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டினை வளப்படுத்த முன்வரவேண்டும், காணிகள் விடுவிக்கப்படவேண்டும் என்கிற கதைகளை புதியவை போல அதிகாரிகள் மத்தியில் பேசியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இதில் முக்கியமான விடயம் என்னவெனில், முன்னைய ஜனாதிபதிகளான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ச மற்றும் தற்போதைய ரணில் விக்கிரமசிங்க இவர்கள் அனைவரும் தமிழ் மக்கள் விடயத்தில் தமிழ்த் தரப்பினர் இவர்களுடன் பல கட்டப் பேச்சுக்களை நடாத்திவந்தபோதிலும் அவை அனைத்தும் தோல்வியிலேயே முடிந்தது. இவ் ஜனாதிபதிகளால் தமிழ் மக்களுக்கான தீர்வுகள் எவையுமே வழங்கப்படவில்லை என்பது அனைவரும் அறிந்த விடயம். 13இல் தான் தலையிடமாட்டேன் என யாழில் சூளுரைத்த ரணில் அவர்கள் மறைமுகமாக இதில் தலையிடுகின்ற சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. இவர் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு விடயத்தினையும் சிங்கள மக்கள் மத்தியில் சென்று இன்னொரு மாறுபட்ட விடயத்தினையும் சர்வதேச மட்டங்களுக்கு பிறிதொரு விடயத்தினையும் இதுவரை காலமும் கூறிக்கூறியே தனது அரசியலைச் செய்து வந்திருக்கின்றார். இவ்வாறு தான் அவரது நரித்தந்திர அரசியல் நகர்த்தப்பட்டு வருகின்றது.

ஒருபக்கம் ராஜதந்திர ரீதியாக திறம்படச் செயற்படுகின்ற அவர் தான் பொருளாதார ரீதியாக வீழ்ந்துகிடந்த இந்த நாட்டை மீட்டெடுக்க தீவிரமாகச் செயற்படுகின்ற ஒருவராகவும் அறியப்படுகிறார். கொவிட் தொற்றுநோயினால் இலங்கை முற்றாக முடங்கியிருந்த நிலையில், நாட்டில் மக்கள் போராட்டங்கள் உச்சம் தொட்டிருந்த காலப்பகுதியில், அரச திணைக்களங்கள் செயலிழந்து காணப்பட்ட நெருக்கடிச் சூழலில் நாட்டைப் பொறுப்பெடுத்து ஒழுங்குபடுத்தியதுடன், நீண்டவரிசை யுகத்திற்கும் தீர்வினை வழங்கியுள்ளார். அத்துடன் நாட்டில் எரிபொருளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவியதை தனது அமைச்சரவையைப் பலப்படுத்தி தீர்வுகாண்பதில் மும்முரமாகச் செயற்பட்டார். பின்னர் சர்வதேச நாணய நிதியத்திடம் கடனைப் பெற்று இன்று அந்த அமைப்பின் கடும் நிபந்தனைகளை மக்கள் அனுபவிக்கவேண்டிய சுமை நிலை ஏற்பட்டுள்ளது. அரகல போன்ற மக்களின் ஜனநாயகப் போராட்டங்களை அடக்கியொடுக்கிய நிலையினையும் தனது நிறைவேற்று அதிகாரப் போக்கினை முழுமையாகப் பயன்படுத்தத் துணியும் ஒரு நபராகவும் பார்க்கப்படுகிறார்.

தற்போது புதியதொரு விடயத்தினை அதாவது மக்கள் மத்தியில் போதைப்பொருட்களை இல்லாதொழிக்கவேண்டும் எனக் கூறிக்கொண்டு, யுக்திய என்கிற நடவடிக்கையின் மூலமாக நாடு முழுவதும் போதைப்பொருள் வியாபாரிகளை, சந்தேகத்திடமானவர்கள் என்கிற அடிப்படையில் ஆயிரக்கணக்கானவர்கள் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இன்னமும் இந்த நடவடிக்கைகள் இரவு பகலாக முப்படைகளாலும் நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டுள்ளதைக் காணக் கூடியதாகவிருக்கிறது. பொது மக்களால் பாராட்டக்கூடிய ஒரு நடவடிக்கை அல்லது வேலைத்திட்டமாக இது இருக்கின்ற போதிலும், இதுவரை காலமும் முப்படைகள் நாட்டில் கடமையில் இருந்தபோதிலும் திடீரென அதிரடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போக்கு நாட்டின் எதிர்காலத் தேர்தலை இலக்குவைத்து மக்கள் மத்தியில் தனக்கான ஆதரவினைத் தேடுகின்ற செயற்பாடா என்கிற கேள்விகள் எழாமலில்லை.

ஏற்கனவே நாட்டில் இருக்கின்ற பாதாள உலக் குழுக்கள், கடத்தல்காரர்கள், மாபியாக்களை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதன் மூலமாக, தனக்குத் தேவையான புதிய குழுக்களை உருவாக்கி, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான நடவடிக்கைகளை இன்றைய ஜனாதிபதி முன்னெடுத்துள்ளாரா என்கிற கேள்வியும் கூடவே எழுகின்றது. இலங்கை மாத்திரமல்ல உலக நாடுகளில் ஆட்சி அதிகாரத்துக்கு வருபவர்கள் தங்களது ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள இந்த மாபியாக்களின் உதவியினையே பெரிதும் நாடுகின்றனர். இவர்கள் கட்டாயம் ஆட்சி அதிகாரங்களில் உள்ளவர்களுக்குத் தேவைப்படுகிறார்கள். அவர்களுக்கு பணம் கொடுத்து தமது தேர்தல் நடவடிக்கைகளுக்கு மாத்திரமல்ல, தங்களது அரசியல் எதிரிகளையும் பழிவாங்கும் நடவடிக்கைகள் அனைத்து நாடுகளிலும் சர்வசாதாரணமாக இடம்பெறுவது உண்டு.

இதனொரு கட்டமாகவே இலங்கையிலும் திடீரென போதைப்பொருள் காரர்களை அழித்தொழிக்கின்றோம் என்கிற போர்வையில் அவர்களைக் கைதுசெய்வதும் பின்னர் பிணையில் விடுதலை செய்வது அல்லது குற்றப்பணம் அறவிடுவது போன்ற நடவடிக்கைகளைச் செய்கிறார்கள். மாபியாக்களை அழித்தொழிக்கின்றோம் அல்லது கைது செய்கின்றோம் என்கிற போர்வையில் தமக்குத் தேவையானவர்களை தெரிந்தெடுக்கவும், புதிதாக உருவாக்கவுமே இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்கிற கேள்வியும் எழுகின்றது.

இலங்கையில் எந்த அரசியல் வாதியின் பின்னால் மாபியாக்கள் இல்லை, எந்த அரசியல்வாதியின் பின்னால் வர்த்தகர்கள் இல்லை. மிகப்பெரும் பணக்காரர்களை பின்னால் ஒளித்துவைத்துக்கொண்டு அவர்களுக்குத் தேவையான விடயங்களைச் செய்து கொடுத்துக்கொண்டு உங்களுக்குத் தேவையான நடவடிக்கைகளுக்காக அவர்களைப் பயன்படுத்திக்கொண்டு, இன்று மக்கள் முன்னால் வந்து நாங்கள் நாட்டைச் சுத்தப்படுத்துகிறோம் எனக் கூறுவது வேடிக்கையானது. உண்மையைக் கூற எவரும் இங்கு தயார் இல்லை. இப் பணக்காரர்கள் தான் ஆளும் வர்க்கத்தினருக்காக தேர்தலில் செலவழிக்கப்போகிறர்கள். இவர்களை அரசாங்கங்கள் பயன்படுத்திவிட்டு இறுதியில் வேள்விக்கு விடப்படும் ஆட்டினை கழுத்தறுத்துக் கொலை செய்வார்களே அதைப்போலவே சுட்டுக்கொல்வது அல்லது கைது செய்து தண்டனை வழங்குவது போன்ற நடவடிக்கைகள் இடம்பெறும். இவர்களை வளர்ப்பவர்கள் இந்த நாட்டின் உயர் அதிகாரிகள் தான்.

ஆகவே நாட்டில் எத்தனை மாபியாக்கள் உரிய முறையில் அரசுக்கு வரி செலுத்தாமல் தமது பாரிய நிறுவனங்களை செயற்படுத்தி வருகிறார்கள். இந்த வருமானமே அரசுக்குப் போதுமானது நாட்டினை முன்னேற்றுவதற்கு. அரச மட்டத்தில் நடைபெறுகின்ற ஊழல்கள் எத்தனை? இதற்கெல்லாம் தீர்வு இன்னமும் கிடைக்கவில்லை. அவர்கள் கைது செய்யப்படுவதும் இல்லை. சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்து வெளியில் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழ்க்கை நடத்துகிறார்கள். தேர்தல்களிலும் போட்டியிட்டு வெற்றியும் பெறுகிறார்கள். நாட்டை அபிவிருத்தி செய்ய இவ்வாறான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொள்வாரா என்றால் இல்லை. அவர் இன்று தனக்கான மாபியாக்களை வடக்கிலும், கிழக்கிலும் தெற்கிலும் நியமித்துக்கொண்டிருக்கிறார். வட்டிக்குப் பணம் கொடுப்பவர்களையும் கொலை கொள்ளை கப்பம் கோரி பிழைப்பு நடத்துபவர்களையும் அவருக்குச் சார்பானவர்களாக மாற்றிக்கொண்டிருக்கிறார் அல்லது தெரிந்தெடுத்துக்கொண்டிருக்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தரப்பினர் மாபியாக்களை வைத்திருந்தனர். கோட்டாபய ராஜபக்ச தரப்பினர் இவர்களைப் பயன்படுத்தினர். பெரும் பணக்காரர்களைப் பயன்படுத்தினர். இன்று இவர்களுடன் பெரும் மாபியாக்கள் கைகோர்த்து நிற்கின்றனர். பணம் படைத்தவர்கள் அருகில் இருக்கின்றனர். இவர்கள் மாபெரும் தொழிற்சாலைகளை தம்வசம் வைத்திருக்கின்றனர். இவர்கள் தான் இன்று மீண்டும் ராஜபக்ச தரப்பினர் ஆட்சிக்கு வரவேண்டும் என்றும் விரும்புகின்றனர். அன்று கிறீஸ் பூதங்களை ஏவிவிட்டவர்கள் யார்? என்ன காரணத்திற்காக திடீரென நாட்டிற்குள் அவ்வாறான குழப்பங்கள் மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டது? சட்டத்தின் முன் யாரும் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டார்களா? வடக்கு மற்றும் கிழக்கில் தமிழர் வாழ்கின்ற பிரதேசங்களில் கலவரங்களை உருவாக்குங்கள் என கலகொட அத்தே ஞானசார தேரர் போன்றவர்களை அனுப்பியவர்கள் யார்? இன்று மட்டக்களப்பில் ஒரு பௌத்த துறவி. யாருக்கும் பயப்படாமல் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் துணிகரமாக ஈடுபடுகின்றார். அவரை அனுமதித்தது யார்? பௌத்த பீடங்கள் ஏன் அமைதியாக அவரை வேடிக்கை பார்க்கின்றன? இவற்றிற்குப் பின்னால் பல உண்மைகள் மறைந்துபோயுள்ளன. மாபியாக் கும்பல்கள் எப்பொழுதும் ஆட்சியாளர்களுக்குத் தேவைப்படுகின்றனர்.

தமிழ் மக்களுக்கானத் தீர்வுகளை வழங்க ரணில் தலைமையிலான அரசு தயாராக இல்லை. அடுத்து வரப்போகின்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தரப்பு யாரை ஆதரிக்கப்போகிறார்கள். மீண்டும் ரணில் அவர்களது பொய்யான வாக்குறுதிகளை நம்பி ஏமாற்றமடையப் போகிறார்களா? பிறிதொரு சிங்கள வேட்பாளர் பொய்யான வாக்குறுதிகளை தமிழ்த் தரப்புக்கு வழங்கி ஏமாற்றப்போகிறாரா? தமிழ் மக்களின் தனித்துவத்தினைப் பேணுவதற்காக தமிழ்த் தரப்பு ஒன்றாக இணைந்து பொது வேட்பாளர் ஒருவரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கப்போகிறார்களா? போன்ற விடயங்கள் இனிவரும் நாட்களில் அரசியல் களத்தில் சூடுபிடிக்கப்போகின்றன.

பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டிய தேவை இருக்கிறது. தொடர்ந்து பிற்போடப்பட்டுள்ள உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளுக்கானத் தேர்தலை நடாத்தவேண்டிய தேவை உள்ளது. இனி தேர்தல் களைகட்டப் போகிறது. நாட்டில் பணத்தினை சுருட்டி வைத்தவர்கள், மாபியாக்கள் பணத்தினை செலவழிக்கக் காத்திருக்கிறார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில் ராஜதந்திர ரீதியாக இரு பக்கமும் சமப்படுத்திச் செல்லவேண்டும் என்பதில் கவனமாக இருக்கிறார். (03ஆம் பக்கம் பார்க்க...)

**இரணியன்**

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## தேர்தலை மையமாக வைத்து நகரும் அரசியல்

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இந்த வருடமளவில் ஜனாதிபதித் தேர்தல் அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தலை இலக்குவைத்து அரசியற் கட்சிகள் பேச்சுக்களை நடாத்தவும், கட்சி விட்டு கட்சி தாவும் வேலைகளையும், போலியான பிரச்சாரங்களையும், கிராமங்களில் மக்களை நோக்கிப் படையெடுக்க ஆரம்பித்துள்ளதையும் காணக்கூடியதாகவிருக்கின்றது.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடனைப் பெற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்த அரசு, தற்போது மக்களின் மீது வரிச் சுமையினை ஏற்றியுள்ளது. சமையல் எரிவாயு மற்றும் எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. மரக்கறி வகைகளின் விலைகள் வானைத் தொட்டுள்ளன. 18 வயதிற்கு மேற்பட்ட பிரஜைகள் அனைவரும் TIN அட்டை இலக்கத்தை வைத்திருக்கவேண்டியது கட்டாயமாகும் என்பதுடன், வருமானம் ஒரு இலட்சத்தைக் கடந்தவர்கள் தான் வரியினை செலுத்தவேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் இதனது திட்டங்கள் மாற்றமும் பெறலாம். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை இலங்கை அரசாங்கம் நாட்டில் செயற்படுத்த ஆரம்பித்துள்ளது தெரிகின்றது. நாட்டிற்குத் தேவையான வருமானத்தை இதன் மூலம் தான் பெற்றுக்கொள்ள முடியும் என ஜனாதிபதி சொல்கிறார்.

ஏற்கனவே நாட்டின் பொருளாதார வீழ்ச்சி மக்களைக் கடுமையாகப் பாதித்துள்ளது. மக்களது வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் நோக்கில் அரசினது வேலைத்திட்டங்கள் அமையவில்லை மாறாக மக்கள் மீது சுமை தான் ஏற்றப்படுகின்றது. கடந்த கால அரசுகளின் ஒழுங்கற்ற முகாமைத்துவம், மலிந்த ஊழல் போன்றவற்றால் நாடு அதளபாதாளம் நோக்கிச் சென்றுள்ளது. பில்லியன் கணக்கில் வெளிநாட்டுக் கடன் மீள செலுத்தப்படவேண்டிய தேவை உள்ளது.

இந்த நெருக்கடிச் சூழலில் தான் பாராளுமன்றத்தின் மூலமாகத் தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக்காலம் இந்த வருடம் நிறைவுபெறும் நிலையில், புதிய ஜனாதிபதி ஒருவரை மக்கள் தெரிவுசெய்யவேண்டும். அத்துடன் பாராளுமன்றமும் கலைக்கப்படவுள்ளதால் பாராளுமன்ற உறுப்பினர்களையும் தெரிவு செய்யவேண்டும்.

தெற்கின் பெரும்பாலான சிங்களக் கட்சிகள் தமது பிரங்கிப் பேச்சுக்களை தற்போதே ஆரம்பித்துவிட்டன. தாம் ஆட்சிக்கு வந்தவுடன் இலங்கையை தலைகீழாக மாற்றிவிடுவோம் என்கிற ரீதியில் கட்டுக்கதைகளை பாராளுமன்றிலும் வெளியிலும் பேசுகின்றனர். இனி யார் வந்தாலும் இலங்கையின் நிலைமை இதுதான் என்பது மக்களுக்குத் தெரியும். வேறு வழியில்லாமல் இழுபறியில் தான் ஆட்சியை நடத்தவேண்டும். இதுவரை பதவியில் இருந்தவர்கள் என்ன செய்தார்கள் என்பதெல்லாம் மக்களுக்கு நன்கு தெரியும்.

தமிழ்த் தரப்பும் தேர்தல்கள் என்று வருகின்றபோது எதிர்கொள்ளவே வேண்டும். கடந்த காலங்களில் சிங்கள வேட்பாளருக்கு வாக்களித்து வாக்களித்து பொய்யான வாக்குறுதிகளால் ஏமாற்றமடைந்தது போதும். இனியாவது தமிழ்த் தரப்பு தமிழ் மக்கள் சார்பாக ஒருவரை பொது வேட்பாளராக நிறுத்தி எமது பலத்தினை உலகறியச் செய்வோம்.



27

## பல்துறை எழுத்தாளர் புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்

அது அவனுக்கு, அவள் மீது அதுவாக இருப்பாலோ - ஐயத்தைத் தோற்றுவித்தது. கண்களில் ஒளிக்கீற்று வீசுகின்றது. அவள், இவள் அல்ல - அவனுக்கு உறுதியானதாலும், எறிகணை வீச்சில் காயமுற்ற பிணை மான் போல அந்த புதிய பெண்மணியின் தோளின் மீது உள்ள பாலகனை அதே சிரிப்புடன்' அதே பாலகனைக் கண்டதும் ஒரு கணம் மருட்சி கொண்டான். பின்னர் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, சனக் கூட்டத்திற்கு மத்தியில் இன்னும் அவள் அருகில் சென்று, கதைக்க விரும்பியபோது, பச்சைப் பாலகன் சாத்தின் பேனையை வலக்கையால் பொத்திப் பிடித்துக் கொண்டு, சாத்தைக் கிட்ட வராதே, கிட்ட வராதே, என்று ஆட்டுவது போல மழலை மொழி பேசி ஆட்டியது. அவனும் ஆமோதித்ததைப் போல நடந்துகொண்டிருக்கும் போதே வீதியில் சில விநாடிகள் விழிகள் இரண்டும் இருட்டிக்கொண்டு வர நின்றான். 'முக்காலமும் உணர்ந்த முனிவர் போல' சாத்தை இந்த சம்பவம் மாற்றிவிட்டது.

பெண்மணியும் குழந்தையும் சாத்தின் கண்களிலிருந்து மறைந்துவிட்டனர். அவனும் பாலகன் மீது இறக்கம் கொண்டு இந்த விடயத்தைத் தனது மனத்திற்குள்ளேயே பூட்டி வைத்தான். இந்த புதிய பெண்மணி யார்? தாய்தானே இறந்து விட்டாளே? இந்த பாலகன் எங்கே போகின்றான்? எது எப்படி போனாலும் எனக்கு என்ன?, இல்லை அப்படி யோசிக்கக்கூடாது? நானே போற வழியைக் காணோம் பிறகு? அந்த பாலகன் என்னதை அறிவான், அவனுக்கு ஏன் இந்த சோதனை? - பல வினாக்களைத் தனக்குள் எழுப்பிக்கொண்டு இருப்பிடத்தின் படலையைத் திறந்தான். அப்போது அவனை அவதானித்துக்கொண்டு வந்த புலனாய்வுத்துறையினர் வேகமாக மோட்டார் சைக்கிளில் ஊடறுத்துச் செல்கின்றனர். இது எங்கே அவனுக்குத்தெரியப்போகின்றது. சாத் என்ன களவு எடுக்கவா சென்றான்?. அவர்களைப் பற்றி யோசிக்க.

சாத், வீட்டின் வாசலில் உள்ள அழைப்பு மணியை அழுத்தினான். "யார் அது வாங்கோ?" - அடுக்களையின் உள்ளேயிருந்து யூஜினின் தாயின் குரல் சற்று கரகரப்புடன், வெளியில் வந்தது.

"நான்தான் சாத் வந்திருக்கன்."
"தம்பி கதவு திறந்துதான் இருக்கு உள்ளே வாங்கோ" - சமையல் அடுக்குப் பண்ணினாள்.
"ஓம் அம்மா."
"கைகால் முகம் கழுவிட்டு வாங்கோ. தேத்தண்ணி குடிப்போம்."
"சரி" - கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான்.
"டவுண் பக்கம் வெடி சத்தம் கேட்டது. ஏதும் பிரச்சினையா?. எங்கட வீட்டையும் வெளியில் போன ஆக்கள் ஒருத்தரும் இன்னும் வரவில்லை." - சாளரத்தினூடாக எட்டிப் பார்த்துக் கேட்டாள்."

சாத், அதைப் பற்றி பெரிதாக யாரிடமும் கதைக்க விரும்பவில்லை.
"பக்கத்து வீதியில் கரும் புலி பாஞ்சிரிச்சாம்."
"மக்கள் யாரும் செத்து, காயப்பட்டு?"
"இல்லை. பாயேக்க பொது மக்கள் யாரும் பக்கத்தில் இருக்கேல்லையாம்."
"நல்லதா போச்சி."
"ஆமில பல பேர் செத்தும் காயப்பட்டும்."
"அவங்கள் சாகட்டும் சிங்கள மோட்டாதானே."
"என்ன அம்மா? நீங்களே இப்படி சொல்லுறீங்க?"
"ஏன்?"
"அவங்களும் உயிர்தானே."
"அவன் எங்கள அப்படி நினைக்கவில்லையே."
"அம்மா, உங்கட வேலைக்குப் போன, கணவரையும் வெளியில் போன, பிள்ளைகளையும் நினைத்து பதட்டப்படுற மாதிரிதானே, இராணுவ வீரர்களுடைய பெற்றோரும் மனையரும் நெஞ்சில் நெருப்ப கட்டிக் கொண்டு இருப்பாங்க."
"நீங்க சொல்லுறதும் சரிதான் தம்பி. அப்படியென்றால், அவங்கட ஊரிலையே இருக்க வேண்டியதுதானே."
"அவங்கட வயிற்றுப் பிழைப்புக்கும் பிள்ளைக் குட்டிகளைப் பாதுகாக்கவும் இஞ்ச வந்து பலியாப் போறாங்க"
"பாவந்தான். நீங்க சொல்ற படி பாத்தா? பணத்துக்காக வந்து, மேலிடத்துக் கட்டளைக்காக அப்பாவி தமிழ் மக்களையும் கொன்று குவிக்கிறாங்க"

"ஆம்..ஆம், எனக்கு சரியா ஆண்டு ஞாபகமில்லை 1999யோ, 1996 ரோ இருக்கும். கிளிநொச்சியில் நடந்த, 'ஸப்ஜெய' இராணுவ நடவடிக்கையிலையோ, எங்கட பொடியளிண்ட ஓயாத அலை இரண்டு நடவடிக்கையிலையோ இறந்து போன இராணுவத்திண்ட 'பொடிகளை' நூற்றுக்கணக்கில் கொண்டு வந்து, யோகபுரம் மகாவித்தியாலயத்தின் மைதானத்தில் குவிச்சாங்கள்."

"இஞ்சையும் அப்படி நடந்துச்சு"
"நான் இன்னும் சொல்லி முடிக்கவில்லை"
"சரி, சுருக்கமாகச சொல்லிமுடிங்க"

"அப்ப, எனக்கு சின்ன வயசு இருக்கும். போய் விளையாட்டாப் போய்ப் பார்த்தோம். செத்துப் போன இராணுவத்தினுடய 'பொக்கற்றுகளில்' தன்னுடைய அம்மாவுடையதும் அப்பாவுடையதும் பெற்றோருடையதும் பிள்ளைகளுடையதும் மனைவிமார்களுடையதும் காதலிமார்களுடையதும் சகோதரங்களுடையதும் படங்களுக்கும் அவர்களுக்கு ஆசையோடு எழுதிய கடிதங்களும் இருந்தன.

இராணுவத்தினர் சிலர் கைளில் தங்களின் பிள்ளைச்செல்வங்களின் - சிசுக்களின் - படங்களைப் பொத்திப் பிடித்த வண்ணம் குண்டடிப்பட்டு இறந்து கிடந்தனர். யோசிச்சுப் பாருங்க வீட்டுக் கஷ்டத்தில் இஞ்ச வந்து எதிர்கால கனவுகளுடன், வீணா செத்துப் போறாங்க. நாங்கள் ஓ.எல் படிச்சிக் கொண்டிருந்த காலம். கொஞ்ச 'செட்டா' போன நாங்கள், செத்துப் போன ஆமியிண்ட சீருடையிலிருந்து தடியால் தட்டி சில கடிதங்களை எடுத்து படித்தோம். அந்த கடிதங்கள் எல்லாம் இரத்தத்தினால், ஊறி கிழிந்து, இரத்த வாடை வீசியது."

"தம்பி சின்ன வயசில் பெரிய அநுபவசாலி போல"
"குழப்ப வேண்டாம் இன்னும் முடியவில்லை. சில கடிதங்களை தடிகளால் தட்டிப் பார்த்தோம். எல்லாப் பக்கங்களும் ஒன்னுடன் ஒன்று ஒட்டி, கசங்கி, மடிந்து இருந்தன. எங்களுக்குச் சிங்களம் வாசிக்க தெரியாததால் வாசிக்கவும் யோசிக்க வில்லை.

நல்ல ஞாபகம் இருக்கு ஒரு ஆமிக்காரனுடைய 'பொக்கற்றில்' இருந்து எடுத்த கடிதத்துடன் வெள்ளைத் தாள் ஒன்றின் தெற்குப் பக்கத்தில் அழகிய இரண்டு கித்தூள் மரங்கள் கீறப்பட்டு, அவற்றில் பால் எடுப்பதற்காக, ஒரு மரத்தில் சிங்கள கலாசாரத்து உடையுடன், ஆடவனும் மற்றைய மரத்தில் தமிழக் கலாசாரத்து ஆடையுடன் மங்கையொருத்தியும் சிறிய வெட்டுக் கத்திகள் கொண்டு வெட்டி அழகிய சிரட்டைகளை இருவரும் கட்டும் காட்சியும், வடக்குப் பக்கத்தில் இரண்டு பனை மரங்கள் கீறப்பட்டு, ஒரு பனை மரத்தின் கீழ் இராணுவ சிப்பாய் ஒருவன் சோகத்தோடு விற்றிருக்க, சற்று தூரத்தே மற்றைய வடலி மரத்தில் தமிழ்க் கலாசார ஆடையுடன், பெண் ஒருத்தி பதுங்கு குழிக்குள் இருந்து கொண்டு, பனை ஓலையில் நீத்துப் பெட்டி இழைக்கும் காட்சியையும் கண்களைக்கவரும்வண்ணஓவியமாக வரைந்து, இரண்டு காட்சிகளுக்கும் இடையே சுதந்திரமான காதல் சோடி உல்லாசமாக பாடித் திரியும் காட்சியும் தீட்டப்பட்டு இருந்தன.

02ஆம் பக்கத் தொடர்ச்சி...

எதிர்வரும் தேர்தலில் மஹிந்த தரப்பு ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கப்போவதில்லை என்கிற நிலைப்பாடே தற்போது இருக்கிறது.

ஆகவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தரப்பின் நடவடிக்கைகள் எவ்வாறு அமையப்போகின்றன. கட்டாயமாக யாரோ ஒருவரை பேரம் பேசலுடன் அல்லது வாக்குறுதிகளை நம்பி ஆதரித்தேயாகவேண்டிய சூழல் இருக்கிறது. அல்லாதுவிடின் தனித்து வேட்பாளரை நிறுத்தி எமது பலத்தைக் காட்டவேண்டும். குறைந்தபட்சம் வடக்கு கிழக்கு இணைந்து சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஆட்சி அதிகாரங்களையாவது எதிர்வரும் காலங்களில் நாம் தக்கவைத்துக்கொள்ள முயற்சிகளை எடுப்பதுதான் தமிழினத்தின் இருப்புக்கு அவசியமானது. இதன் அடிப்படையில் செயற்பட அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்றித்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை, பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளவேண்டும். இன்று தேர்தல் ஒன்றிற்குத் தன்னைத் தயார்படுத்திக்கொள்ளும் முனைப்புடன் ஜனாதிபதி நாடு முழுவதும் பயணங்களை மேற்கொண்டு தனது வழமையான ராஜதந்திரச் செயற்பாடுகளை ஆரம்பித்து விட்டார் என்பது தெளிவாகின்றது. அதனொரு கட்டமாகவே அவர் வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

தமிழ் மக்களுக்கு அநியாயங்களைச் செய்துவிட்டு இன்று தமிழ் மக்கள் முன் தோன்றி நல்லவர் போல நடிப்பவர்கள் தான் இவர்கள். வெள்ளை ஆடையினை அணிந்துகொண்டு மனது முழுவதும் அசுத்தமாக வைத்திருக்கக்கூடியவர்கள். எது எவ்வாறாக இருந்தாலும் கடந்த காலங்களில் செய்த தவறுகளை மீண்டும் மீண்டும் செய்யாமல், போலியான வாக்குறுதிகளை நம்பி ஏமாற்றமடையாமல், எந்தவித நிபந்தனைகளுமின்றி ஆதரவு வழங்காமல், பலமானதொரு பிடியினை கையில் வைத்துக்கொண்டு, எதிர்வரும் காலங்களில் தமிழ்த் தரப்பு மிகுந்த அவதானத்துடன் அரசியலில் காய்களை நகர்த்தவேண்டும் என்பதே இக் கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

# 2024 : வெற்றி ஆண்டா? தோல்வி ஆண்டா?



கடந்த 24ஆம் திகதி இரவு பதினோரு மணிக்கு அதாவது நத்தார் பிறப்புக்கு முன், மட்டக்களப்பில் ஒரு சோகமான சம்பவம் இடம்பெற்றது. 42 வயதான ஒரு குடும்பஸ்தர் கல்லடி பாலத்தில் இருந்து வாவிக்குள் குதித்து தற்கொலை செய்ய முயற்சித்தார். ஆனால் நீரில் மூழ்கத் தொடங்கியதும் சாகப் பயந்து பாலத்தின் தூண் ஒன்றைப் பிடித்துக் கொண்டு தத்தளித்திருக்கிறார். படகுகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் அவரைக் காப்பாற்றினார்கள். போலீஸ் அவரை தற்கொலை செய்ய முயன்ற குற்றச்சாட்டில் கைது செய்திருக்கிறது. அவர் ஒரு ஏழை மேசன். ஐந்து பிள்ளைகளின் தந்தை. கட்டிடப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதால், அவருக்கு தொழில் இல்லை. நத்தார் சீசனை முன்னிட்டு ஆடைகள் வாங்கக் காசு இல்லை. வீட்டில் மனைவி நச்சரித்திருக்கிறார். எனவே, வாழ்க்கை வெறுத்துப்போன அக்குடும்பத் தலைவர், இயேசு நாதர் பிறந்த நாள் எனது இறந்த நாளாக அமையட்டும் என்று கூறி பாலத்தில் இருந்து குதித்து தற்கொலை செய்ய முயற்சித்திருக்கிறார். இயேசு பிறப்பை தனது இறப்பாக அறிவிக்கும் அளவுக்கு ஒரு ஏழை கிறிஸ்தவரை வறுமை தாக்கியிருக்கிறது. இதுதான் நாட்டில் ஆண்டு இறுதி நிலவரம்.

நாட்டில் நத்தார் மரத்தின் விலையை வைத்து நாட்டின் பொருளாதாரத்தை மதிப்பிடலாம். டிசம்பர் மாதத்தின் தொடக்கத்தில் ஒன்றரை அடி உயரமான ஒரு நத்தார் மரம் கிட்டத்தட்ட 3500 ரூபாய்க்கு விற்கப்பட்டது. எனினும் ஒரு கிழமைக்கு பின் சுமார் 4 அடி உயரமான நத்தார் மரம் 6000 ரூபாய்க்கு வந்தது. ஆனால் முட்டை விலை குறையவில்லை. கூடியது. ஒரு மூட்டை 60 ரூபாய். இம்முறை பெரும்பாலான ஏழைகளின் வீடுகளில் கேக் இல்லாத கிறிஸ்மஸ்தான்.

முட்டை விலை மட்டுமல்ல பச்சை மிளகாய், தக்காளி உள்ளிட்ட அனைத்து மரக்கறிகளின் விலைகளும் உயர்ந்து விட்டன. வழமையாக கிறிஸ்மஸ் சீசனில் மரக்கறி விலைகள் உயர்வதுண்டு. தைப் பிறப்போடு குறைவதுண்டு. ஆனாலும் இம்முறை விலை உயர்வு அசாதாரணமாகக் காணப்பட்டது. பச்சை மிளகாய் ஒரு கிலோ 1400 ரூபாயிலிருந்து 2000 ரூபாய்வரை போனது. வெங்காயம், தக்காளியின் விலைகளும் அதிகம். சிங்கள யூடியூப்பர்கள் மரக்கறி விலை உயர்வைக் காட்ட சில வேடிக்கையான காணொளிகளை வெளியிட்டார்கள். அதில் ஒரு காணொளியில் ஒரு பச்சை மிளகாயை நூலில் கட்டி கறிக்குள் போடுகிறார்கள். கறி காய்ச்சியதும் அதை எடுத்து மற்றொரு கறிக்குள் போடுகிறார்கள். வேறு ஒரு காணொளியில் ஐந்தாறு பச்சை மிளகாய்கள் ஒரு பக்கம் இன்னொரு பக்கம் ஒரு தக்காளிப் பழம் மட்டும். அதாவது ஒரு தக்காளி பழத்தின் பெறுமதிதான் ஐந்தாறு பச்சை மிளகாய்கள் என்று பொருள். இப்படித்தான் இம்முறை நாட்டில் ஆண்டிறுதி அமைந்தது.

இந்த லட்சணத்தில் அடுத்த ஆண்டு நெல் உற்பத்தி பாதிக்கப்படலாம் என்று விவசாயிகள் எச்சரிக்கிறார்கள். நெற் பயிர்களைத் தாக்கும் வெள்ளைத் தத்தியை அழிப்பதற்கு விவசாயத் திணைக்களம் முயற்சிக்கவில்லை என்றும் அதனால் விளைச்சல் பாதிக்கப்படலாம் என்று விவசாயிகள் கூறுகிறார்கள். அதாவது பழைய ஆண்டு நல்ல செய்திகளோடு முடியவில்லை. புதிய ஆண்டும் நல்ல செய்திகளோடு பிறக்கவில்லை என்று பொருள்.

புதிய ஆண்டில், அரசாங்கம் வற் வரியை அதிகரித்துள்ளது. இருபது ஆண்டுகளில், ஆகப்பெரிய வரி அதிகரிப்பு இது. புதிய ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட அனைவரும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிந்து வரி செலுத்துனர் அடையாள இலக்கத்தை வைத்திருப்பது கட்டாயமாகும். அவ்வாறு பதிவு செய்யாதிருப்பது 50,000 ரூபாய்க்குக் கூடாத அபராதத்தை விதிக்கக்கூடிய தண்டனைக்குரிய குற்றம் என்று ஒரு செய்தி சமூக வலைத்தளங்களில் அதிகமாகப் பரவி வருகிறது

புதிய ஆண்டு வரி அதிகரிப்பின் ஆண்டாக மட்டும் அமையவில்லை. அது ஒரு தேர்தல் ஆண்டாகவும் அமையப் போகின்றது என்பதுதான் இலங்கைத் தீவின் அரசியல் அவலம். ஆண்டின் தொடக்கத்தில் தமிழரசு கட்சிக்குள் தலைவர் யார் என்பதற்குத் தேர்தல் நடக்கும். ஆண்டின் இறுதியில் அடுத்த ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கும் தேர்தல். ஒரு தேர்தலில் தொடங்கி மற்றொரு தேர்தலில் முடியப்போகும் ஆண்டு.

நாடு இப்போதுள்ள நிலையில், தமிழரசியல் இப்போதுள்ள நிலையில் தமிழரசுக் கட்சிக்குள் ஒரு தேர்தல் அவசியமா? என்று ஒரு நண்பர் கேட்டார். கடந்த 15 ஆண்டுகளாக தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு எதைப் பெற்று தந்திருக்கின்றது? எதையுமே பெற்றுத் தரவில்லை. அதற்கு அதன் தலைமைதான் காரணமா? ஒரு புதிய தலைமை கிடைத்துவிட்டால், தமிழரசுக் கட்சி அதிசயங்களையும் அற்புதங்களையும் நிகழ்த்திவிடும் என்று எதிர்பார்க்கலாமா? என்றும் அவர் கேட்டார்.

உண்மைதான். தமிழரசுக் கட்சிக்குள் இப்பொழுது நடப்பவை யாவும் கடந்த 15 ஆண்டுகாலத் தோல்வியின் விளைவுகளே. அந்தத் தோல்விக்கு எல்லாருமே கூட்டுப்பொறுப்பு. இப்பொழுது தலைமைப் பதவிக்காகப் போட்டியிடும் அனைவருமே அதற்குக் கூட்டுப்பொறுப்பு. தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள மிகப்பெரிய கட்சி அது என்ற அடிப்படையில், அக்கட்சியின் தோல்விதான் தமிழரசியலின் தோல்வியும் எனலாம். அக்கட்சியின் எல்லா மூத்த தலைவர்களும் அதற்குப் பொறுப்புக்கூற வேண்டும். இவர்களில் யார் தெரிவு செய்யப்பட்டாலும் தமிழரசியலை வெற்றிப் பாதையில் செலுத்த முடியுமா?

யார் தலைவராக வந்தாலும் அவர்கள் முன் இரண்டு பெரிய பொறுப்புக்கள் உண்டு. முதலாவது பொறுப்பு, கடந்த15 ஆண்டுகளாக உடைந்து உடைந்து சிறுத்துக்கொண்டு வரும் தமிழ் ஐக்கியத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டும். கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் ஐக்கியம் உடைந்து போனதற்கு தமிழரசுக் கட்சி தான் பெரும் பொறுப்பு. அக்கட்சி ஏனைய கட்சிகளை அவமதித்தது அல்லது ஏனைய கட்சிகளுக்குள்ளால் தேர்தல் கேட்டு வெற்றி பெற்றவர்களை உருவி எடுத்துத் தன்னுடன் சேர்த்துக்கொண்டது. இவ்வாறு, தான் ஒரு பெரிய கட்சி என்ற அடிப்படையில், மூத்த கட்சி என்ற அடிப்படையில், அதற்குரிய பக்குவத்தோடு பெருந்தன்மையோடு தமிழரசுக் கட்சி நடந்துகொள்ளவில்லை.

தன்னுடைய பெயருக்குத்தான், தன்னுடைய சின்னதுக்குத்தான் தமிழ் மக்கள்வாக்களிக்கிறார்கள்என்றுதமிழரசுக் கட்சி நம்பியது. தான் ஒரு தும்புத்தடியை தேர்தலில் முன்னிறுத்தினாலும் மக்கள் கண்ணை மூடிக்கொண்டு வாக்களிப்பார்கள் என்று தமிழரசுக் கட்சி திமிரோடு நம்பியது. அதனால் ஏனைய பங்காளிக் கட்சிகள் தன்னுடைய பலத்தில்தான் கூட்டமைப்புக்குள் தொங்கிக் கொண்டிருக்கின்றன என்றும் கருதியது. அதனால் பங்காளிக் கட்சிகளை அவமதித்தது, புறக்கணித்தது. ஒன்றாக இருக்க முடியாதபடி அவமானகரமான ஒரு சூழலை ஏற்படுத்தியது. விளைவாக, ஐக்கியம் உடைந்தது. கூட்டமைப்பு சிதைந்தது. இப்பொழுது தமிழரசு கட்சிக்குள்ளேயே உடைவுகள், சிதைவுகள் உருவாகிவிட்டன. எனவே ஒரு மூத்த பழம்பெரும் கட்சியின் தலைவராக வரப் போகும் ஒருவர் முதலில் உடைந்து சிதறிய ஐக்கியத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டும்.

அதன்பின், அடுத்த கட்டமாக தமிழ் மக்களின் அரசியல் இலக்கை வென்றெடுப்பதற்கான வழிவரைபடத்தை தயாரிக்க வேண்டும். எல்லாருமே சமஸ்ரியைத்தான் கேட்கின்றார்கள். ஆனால் யாரிடமாவது சமஸ்ரியை அல்லது அதைவிட உயர்வான ஒரு தீர்வைப் பெறுவதற்கான வழிவரைபடம் உண்டா? தமிழரசுக் கட்சிக்கு ஆங்கிலப் பெயர் சமஸ்ரிக் கட்சி என்பதுதான். ஆனால் செல்வநாயகம் காலத்தில் இருந்து இன்று வரையிலும் 73 ஆண்டுகளாக சமஸ்ரியைப் பெற முடியவில்லை. கட்சியின் புதிய தலைமை அதற்குரிய வழிவரைபடத்தை தெளிவாக முன்வைக்குமா ?

அந்த வழிவரைபடத்தின் அடிப்படையில் தமிழரசியலை வழிநடத்தத் தேவையான தகைமை, கொள்ளளவு, தியாக சிந்தை, விசுவாசம் போன்றன தமிழரசுக் கட்சிக்குள் உள்ள எந்தத் தலைவரிடம் உண்டு? அப்படி ஒரு தலைவரிடம் எல்லா தகமைகளும் இல்லையென்றால், பல்வேறு வகைப்பட்ட ஆளுமைகள் இணைந்த இணைத்தலைமையை உருவாக்கலாம். அதுதான் இப்போதிருக்கும் நடைமுறைச் சாத்தியமான ஒரே வழி.

இது தொடர்பாக அரசியல் விமர்சகர் ஜோதிலிங்கம் ஏற்கனவே தமிழரசுக் கட்சிக்குக் கூட்டுத் தலைமை வேண்டும் என்று கூறியிருக்கிறார். அதற்கு அவர் தமிழர் விடுதலைக் கூட்டணியை உதாரணமாக காட்டியிருக்கிறார். தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் வேறு வேறு கட்சிகள் இணைந்தன. அதனால் அக்கட்சிகளின் தலைவர்கள் கூட்டுத் தலைமையை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் தமிழரசுக் கட்சி ஒரே கட்சி. அங்கே ஒருவர் மற்றவரை விட தன்னை மேலானவராக கருத முற்பட்டதன் விளைவாகத்தான் போட்டோ போட்டிகள் ஏற்பட்டன. எனவே ஒரே கட்சிக்குள் இணைத்தலைமைகளைஏற்றுக்கொள்வது என்பது உயர்ந்த பட்ச ஜனநாயகம் ஆகும். 2009க்குப்பின் தோன்றிய தமிழ் மக்கள் பேரவையும் இணைத் தலைமைகளைக் கொண்டிருந்தது என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

இணைத் தலைமையை ஏற்றுக்கொள்வது என்பது, தன்னிடம் இல்லாத தகுதி வேறு யாரிடமோ இருக்கிறது என்பதனை ஏற்றுக்கொள்வதுதான். சட்டப் புலமை, ஆங்கில அறிவு போன்ற தகுதிகள் மட்டும் தலைமை தாங்கப்போதுமானவை அல்ல. போராட்டப் பாரம்பரியமும் பலமான வாக்கு வங்கியும் மட்டும் தலைமை தாங்கப் போதுமானவையல்ல. 2009க்குப் பின்னரான தமிழ்த் தலைமைகளுக்கு அதைவிடக் கூடுதலாக, பண்புருமாற்றத்திற்குத் தேவையான தகமைகள் அதிகம் வேண்டும். பண்புருமாற்றம் என்பது கட்சித் தலைமையை கைப்பற்றுவதற்காக மற்றவர்களைச் சுதாகரித்து, தமிழ்த் தேசிய முகமூடி அணிந்து, நடிப்புக்கு உறவு பாராட்டுவது அல்ல.

ஆயுதப் போராட்டம் ஒன்றுக்கு பின்னரான மிதவாத அரசியலுக்குத் தேவையான, பிராந்திய மற்றும் பூகோள நிலைமைகளைப் பொருத்தமாகக் கையாளத் தேவையான, புதிய தொழில்நுட்ப வளர்ச்சியை உள்வாங்கி, புதிய மாற்றங்களுக்கு தயாரான தலைமைகளே தமிழ் மக்களுக்குத் தேவை. தமிழரசுக் கட்சி அதற்குத் தயாரா?

2023 முடியும்போது காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுக்கான போராட்டம் 2500ஆவது நாளைக் கடந்திருக்கிறது. மயிலத்தமடுவில் மேச்சல் தரையை மீட்பதற்கான போராட்டம் நூறாவது நாளைக் கடந்திருக்கிறது. சமஸ்ரிக் கட்சி அதாவது தமிழரசுக் கட்சி சமஸ்ரியை அடையத் தவறிய 73ஆவது ஆண்டு கடந்திருக்கிறது. புதிய ஆண்டு தமிழரசுக் கட்சியின் 74ஆவது தோல்வியாண்டாக அமையுமா? அல்லது, கடந்த ஒரு நூற்றாண்டு காலத் தோல்வியில் இருந்து கற்றுக்கொண்ட ஆண்டாக அமையுமா?

**நிலாந்தன்**

# இன அழிப்பு அத்தியாயம் - கஞ்சிக்கு கை ஏந்தியவர்களையும் கொன்று குவித்தது சிங்கள அரசு

ஈழத் திருநாட்டில் ஏடறிந்த வரலாற்று காலந்தொட்டே தொன்மை வாய்ந்த தமிழர்கள் வாழ்ந்து வந்தார்கள். வடக்கு கிழக்கு பகுதியில் வாழும் பாரம்பரிய தமிழர்களின் வரலாறு தொன்மையானதே. ஒரு தேசிய இனமாக வாழ்ந்த தமிழர்கள் ஆளும் வர்க்கத்தின் இன ஒடுக்குமுறையை எதிர்கொண்டபோது சாட்சியமற்ற வன்முறை, சாட்சியமற்ற யுத்தம் என பேரினவாத அரசு கால காலமாய் செய்துவரும் அடக்கு முறைகள், பேச்சுரிமை, கருத்துரிமை முதற்கொண்டு வாழ்வுரிமை வரை திட்டமிட்டே கல்வி, கலை, பொருளாதாரம் பறிக்கப்பட்ட உலக அரங்கில் ஈழத்தமிழர்களையும் விடுதலைப் புலிகளையும் பயங்கர வாதிகள் என்று முத்திரை குத்தி பௌத்த பேரினவாதம் சிங்கள அரசு தடை விதித்தது.

சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கான வழிமுறைகள் அனைத்திற்கும் பொருளாதாரத் தடை மூலம் முட்டுக்கட்டைகள் போட்டது. இலங்கை அரசின் தேசிய ஒடுக்குமுறை யுத்தத்தை எதிர்த்துப் போராடி விடுதலை பெற்று ஒரு சுதந்திரமான தேசமாக வாழ்வதா? அல்லது பணிந்து அடிமைப்பட்டு அவதியுற்றுக் கிடப்பதா? தேசியப் பிரச்சினையைத் தீர்க்க எமது தாயக மண் முழுமையாக விடுதலைபெற வேண்டும். எமது மக்கள் பூரண சுதந்திரமாக வாழவேண்டும் என எமது மாவீரர்கள் மண்ணுக்காக மண்ணிலே புரிந்திருக்கின்ற தியாகங்களை சொற்களால் எழுத்துக்களில் அடக்கிட முடியாது.

மக்களின் நியாயமான உரிமைகள் மறுக்கப்படும் போதும் இனங்களின் உரிமைகளை அங்கீகரிக்காமல் ஒடுக்கும் போதும் அரசுக்கு எதிரான மக்கள் போராட்டங்கள் வெடிக்கின்றன. அமைதி வழியில் போராடும் மக்களை அரசு தனது ஆயுத பலத்தால் அடக்க முயல்கிறது. அடக்குமுறைகள் எல்லை மீறும்போது அது அரச பயங்கரவாதமாக உருவெடுக்கிறது. இதில் விடுதலை புலிகளைத் தேடி அழிப்பது என்ற பெயரில் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு இலங்கை அரசு பாரிய இனவெறி யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டது.

இலங்கையை ஆளும் சிங்களப் பேரினவாதத்தின் பயங்கரவாத அரசு காலத்துக்கு காலம் மாறி மாறி ஆட்சிபீடம் ஏறி ஒரு நாடு அதன் தேசிய இன மக்கள்மீது, இனப் படுகொலையினை செய்வதும் பொருளாதாரத் தடையை விதிப்பதும், தமிழ் மக்களைப் பட்டினி போட்டு ஆட்சி நடத்த முற்படுவதும், ஆட்சியாளர்களும் அரச படையினரும் தாக்குதல்களை தமிழர்கள் மீது தரைவழி, கடல்வழி, வான்வழியாகத் பல முனைகளில் தொடுத்து, முன்னேறத் தொடங்கியபோது நடத்திய இன அழிப்பு சம்பவங்களில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

ஐ.நாவில் உறுப்புரிமை பெற்ற இலங்கை அரசுக்கு உலகெங்கும் உள்ள நாடுகளின் ஆதரவுடன் சர்வதேச விதிகளையும் போர் ஒழுக்க நெறிகளையும் மீறிய இலங்கை அரச பயங்கரவாதம் தமிழர்களின் தாயகப் பகுதிகளை ஆக்கிரமித்து இருந்தது. மக்கள் குடியிருப்புக்கள், மருத்துவமனைகள் மீது நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சு, கொத்துக்குண்டு, பொஸ்பரஸ் குண்டு, எறிகணை, உந்துகணைத் தாக்குதல்கள் மட்டுமல்லாது சிங்களப் படைகள் கண்மூடித்தனமான நேரடித் தாக்குதலையும், கிபிர், மிக் போன்ற போர் விமானங்கள், எம்.ஐ.24 உலங்குவானூர்திகள், கனரக ஆட்டிலறிகள், பீரங்கிகள், கடற்படையினரின் பீரங்கி மற்றும் மோட்டார் உட்பட சிங்கள காலாட் படையினரின் நீண்டதூர வீச்சுக்கொண்ட துப்பாக்கிகளாலும் சரமாரியான தாக்குதல்கள் நடத்தப்பட்டன. முதியவர், பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள் என்று வேறுபாடுகள் பாராமல் ஏராளமான மக்கள் உள்நாட்டில் அகதியாய் இடப்பெயர்ந்தவர்கள் பாதுகாப்பு வலயங்களில் சிதறுண்டு போனார்கள். எதிரியின் ஆக்கிரமிப்புக்களையெல்லாம் இடைநிறுத்தி நெருப்பாற்றைக் கடப்பது போன்று போராளிகள் நேருக்கு நேர் நின்று களத்தில் வெற்றிகளையும் தோல்விகளையும் சந்தித்தார்கள்.



*2006* ஆவணியில் யாழ் குடா நாட்டிலும், மாவிலாறு தொடர்பாகச் சம்பூரிலும், பின்னர் முள்ளிக்குளம் முதல் சிங்களப் படை தொடக்கிய சமர்களினால் தாக்குதல்கள் வீச்சுடன் கிளம்ப சிங்களப் படையினை எதிர்பார்த்திருந்த தமிழர் தரப்பு பல முறியடிப்புச் சமர்களையும் நிகழ்த்தியது. பொருளாதாரத் தடை என்ற பெயரில் வடக்கில் எங்கள் உரிமைகளும் உணர்வுகளும் மறுக்கப்பட்டு, அடக்கப்பட்டு ஏதோ ஓர் இனம்புரியாத சூனியத்திற்குள் தள்ளப்பட்டார்கள். பொருளாதாரத் தடை கூட ஓர் கருவியாக, ஆயுதமாக தமிழ் மக்களின் உயிரை குடித்திட உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவியது.

பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டமையினால் அதிக விலையில் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டது. தென் பகுதியிலிருந்து ஏ9 வீதியூடாக பொருட்கள் எடுத்து வரப்படாமையினால் இந்த நிலை ஏற்பட்டது. அத்தியாவசியப் பொருட்கள் முக்கியமாக தடுப்பூசி மருந்துகள், (Antibiotics) போன்ற வலிநிவாரணிகள் மயக்க மருந்து (Anesthetic) அறுவை சிகிச்சைகளின் போது வலி தெரியாமல் இருப்பதற்காகவும் மயக்கமடையச் செய்வதற்காகவும் கொடுக்கப்படும் மருந்துகள் எல்லாம் ஒரு மனிதனின் உயிரைக்காக்க அத்தியாவசியமானவை. இவற்றையெல்லாம் இலங்கை அரசு பொருளாதாரத் தடை என்ற போர்வையில் வட கிழக்கு பகுதிக்கு வரவிடாமல் தடுத்தது. பொருளாதாரத்தடை மூலம் மறுக்கப்பட்ட உரிமைகள் பற்றியே பேச வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பிரகடனம் (Universal Declaration of Human Rights-UDHR), பெண்கள் உரிமைகள் (Women's Human Rights and Gender Equality) சிறுவர் உரிமைகள் (Convention on the Rights of the Child-CRC) வாழ்வுரிமை (Right to Life), பேச்சு மற்றும் கருத்துரிமை (Right to Freedom and Expression), பன்னாட்டு குடிமக்கள் மற்றும் அரசியல் உரிமைகள் ஒப்பந்தம் (International Covenant of Civil and Political Rights-ICCPR), பன்னாட்டு பொருளாதார, சமூக, மற்றும் பண்பாட்டு உரிமைகள் ஒப்பந்தம் (International Covenant of Economic, Social, and Cultural Rights-ICESCR-1996), ஊடகவியலாளர் பத்திரிகைச் சுதந்திரம் UN (Plan of Action on the Safety of Journalists) மற்றும் அவ்வாறான அடிப்படை உரிமைகளில் சில முக்கியமானவை. சுகாதாரம், (public health) கல்வி, (Education) ஊட்டச்சத்து உணவு (Nutrition food) சர்வதேச சட்டங்கள் போன்ற ஆவணங்களின் படி பொதுவாக அடிப்படை மனித உரிமைகள் பொருளாதாரத் தடை மூலம் பாதிக்கப்பட்டிருந்தோம். United Nations (ஐக்கிய நாடுகள் அவை) ஐ.நா பாதிக்கப்படுபவர்களின் உரிமைகளை பாதுகாக்கிறார்களோ இல்லையோ எல்லாவற்றையும் நன்றாகவே வரையறுத்தும், பட்டியலிட்டும் வைத்திருக்கிறார்கள். ஐ.நா மற்றும் சர்வதேச சட்டங்களின் படி பார்த்தால் அது வெறும் உணவுக்கும் மருந்துக்குமான தடையாக மேலோட்டமாக எண்ணத் தோன்றவில்லை.



தேசிய இனப் பிரச்சினை காரணமாக எழுந்த போர்ச் சூழ்நிலையாலும் மனிதப் படுகொலைகளையும் உண்டாக்கி ரத்த ஆற்றை ஓடவிட்ட சிங்களப் பேரினவாதம் தமிழ்ச் சமூகத்தின் மீது தொடுக்கக்கூடிய ஒடுக்குமுறையில் ஒன்றே சிங்கள அரசின் பொருளாதாரத்தடை ஆகும். அரசாங்கத்தின் குறைவான மதிப்பீட்டின் விளைவாக, வன்னிக்கு உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்பட்ட உணவுப் பொருட்கள் நிஜத் தேவையை விட மிகக் குறைவாக இருந்தன. ஒரு தேசிய இனத்தின் அடிப்படை வாழ்வாதார உரிமையினை மறுத்து மீண்டும் நவீன சிறைக்குள் முடக்கி வைக்க எத்தனிக்கும் கபடத்தனமான இத்திட்டத்தை பொருளாதார அரசியல் சமூகப் பண்பாட்டு ரீதியில் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வரும் ஒரு சமூகத்தின் மீது தொடுக்கப்பட்ட ஓர் உளவியல் மற்றும் உடல் ரீதியான சித்திரவதைகளைப் போல பொருளாதார அடக்குமுறையும் ஒருவகை சித்திரவதை ஆகும்.

ஈழம் ஒரு செழிப்பான பூமி, வளங்கள் பல நிறைந்த தேசம். தன்னிறைவான பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பி அதனை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்லக்கூடிய நீர் வளத்தையும் நில வளத்தையும் மனித தொழிலாக்க வளத்தையும் கொண்டது. இயற்கையின் கொடையாக எமக்கு வழங்கப்பட்ட இந்த வளங்களை நாம் இனம் கண்டு அவற்றை உச்சப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரவேண்டும் என்ற தமிழீழத் தேசியத் தலைவரின் சிந்தனையின் வடிவமாய் தமிழீழத்தின் பொருளாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்தி மக்களின் தேவைகளை நிறைவுசெய்யும் வகையில் பொருத்தமான துறை, திறன்சார் திட்டமிடுதலின் அடிப்படையில் உரிய இயற்கை வளங்களைக் கொண்டு உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும் வேளாண்மையும், மீன்பிடி, கைத்தொழில் பொருண்மிய கட்டுமானத்திற்கு அடித்தளமானது என்பதால் இவற்றை வளர்த்தெடுக்க தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் தொடங்கப்பட்டு பொருளாதாரத்தில் தன்னிறைவானதொரு சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற முனைப்புடனேயே இயங்கியது.

தமிழீழத் தனியரசுக்கு உட்பட்ட பிற நகரங்களிலும் அரசின் சார்பில் பல வணிக நிறுவனங்கள் அமைக்கப்பட்டிருந்தன. சேரன் வாணிகம், சோழன் வாணிகம், பாண்டியன் வாணிகம், இளந் தென்றல் வாணிகம் எனத் தூய தமிழ்ப் பெயர்களால் அழைக்கப்பட்ட அந்த வணிக நிறுவனங்களின் சார்பாக உணவகங்கள், மருந்துக் கடைகள், வேளாண் பொருள் விற்பனையகங்கள், உந்துருளி விற்பனைக் கூடங்கள், வண்ணப்படக் கலையகங்கள், பண்ணைகள், உள்ளூர் உற்பத்தி தொழிற் சாலைகள், சுழற்சி முறை மீள் உற்பத்திகள், மரங்களை நாட்டுதல், இயற்கை பாதுகாப்பு என பட்டியல் நீண்டு கொண்டு செல்லும். திறமை மிக்க போராளிகளின் பொறுப்பில் அவை சீராகவும் நேர்த்தியாகவும் இயங்கின.

தொடரும்...

**நிலவன்**

# தொல்லியலில் மதமும் அரசியலும்... சட்டம் சொல்வதென்ன?




இந்த தலைப்பினுடைய முக்கியத்துவம் பற்றி எதையும் விரிவாக சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. சமகாலத்திலே குருந்தூர் மலையை ஒட்டி நடைபெற்ற சம்பவங்கள் அது தொடர்பாக நடைபெற்ற வழக்கு, அதை விசாரித்த நீதிபதி பதவியில் இருந்து விலகி நாட்டை விட்டு சென்றுள்ளமை போன்றவை தொல்லியல் திணைக்களத்தினுடைய அதிகாரங்கள் எவை என்பது தொடர்பாக பொதுத்தளத்திலே பல கேள்விகளை முன்னிறுத்துகின்றன. அதற்கு ஒரு மேலோட்டமான விடையை வழங்கும் நோக்கிலாவது இந்தக் காணொளியை பதிவு செய்கின்றோம்.

தொல்லியல் திணைக்களத்தின் அதிகாரங்கள் தொல்பொருள் சின்னங்கள் தொடர்பான சட்டம் ஆங்கிலேயரினுடைய ஆட்சிக் காலத்திலே 1940 ஆம் ஆண்டு 9 ஆம் கட்டளை சட்டமாக நிறைவேற்றப்பட்டது. 1955 ஆம் ஆண்டு அது திருத்தப்பட்டது. பின்னர் நீண்டகாலம் திருத்தப்படாமல் இருந்து 1998 இலும் பின்னர் இறுதியாக 2005 ஆம் ஆண்டிலும் இந்த சட்டம் திருத்தப்பட்டது. அதன் பிரகாரம் தொன்மை என்ற சொல்லின் வரைவிலக்கணமானது அந்த சட்டத்தில் பிரிவு 48 இல் சொல்லப்பட்டுள்ளது.

அதாவது தொன்மை (antiquity) என்ற வார்த்தைக்குள் இரண்டு விடயங்களை சேர்க்கின்றார்கள். ஒன்று தொன்மையான கட்டிடம் (ancient monuments) மற்றையது தொன்மையான பொருட்கள். தொன்மையான கட்டிடம் என்று சொல்லப்படுவதற்கு வரைவிலக்கணம் 1815 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னரான கட்டிடங்கள் தொன்மையான கட்டிடங்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. அதாவது இந்த தீவின் கட்டுப்பாடு முழுமையாக ஆங்கிலேயரினுடைய ஆட்சிக்கு வந்த நாளிற்கு முற்பட்ட காலப்பகுதியினை, அந்த காலப்பகுதிக்கு உரிய கட்டிடங்களை இதனுள் வைத்து நோக்க வேண்டும் என்பது தான் இந்த தொல்லியல் சட்டத்தினுடைய ஏற்பாடாக இருக்கிறது.

இந்த தொல்லியல் சட்டத்தினுடைய பிரிவு 2 இன் பிரகாரம் ஏதேனும் காணியில், அது தனியார் காணியாக இருக்கலாம், ஏதாவது தொன்மையான பொருள் கண்டுபிடிக்கப்பட்டாலும் அது மேல் சொல்லப்பட்ட வரைவிலக்கணத்திற்கு உட்படும் பட்சத்தில் அந்த பொருள் மீது நீங்கள் உரிமை கோர முடியாது. அந்த தொல்பொருள் அரசுக்குச் சொந்தமானது. வேண்டுமென்றால், அந்தப் பொருளை அது எந்த தனி நபரினுடைய காணிக்குள் இருந்து பெறப்பட்டதோ அவரிடம் அதற்குரிய சந்தை விலையை கொடுத்து அரசாங்கம் வாங்கலாம் என்று சட்டம் ஏற்பாடு செய்கின்றது. ஆனால் அரசாங்கம் அதனை கட்டாயம் செய்ய வேண்டும் என்று சொல்லப்படவில்லை. இந்த சட்டத்தினுடைய முதலாவது பாகம் இந்த பொருட்களை கண்டுபிடித்தல் பற்றியதாக இருக்க, இரண்டாவது தொல்லியல் ரீதியான அகழாய்வை யார் செய்யலாம் என்பது தொடர்பாக இருக்கின்றது. அதன் பிரகாரம் தொல்லியல் திணைக்களத்தினுடைய பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரம் இன்றி எவரும் தொல்லியல் அகழாய்வு செய்ய முடியாது.

பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறை என்று ஒன்று இருந்தாலும் அங்கு தொல்லியல் வேலை செய்யப்பட்டிருந்தாலும் அவர்கள் கூட தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியை பெறாமல் தொல்லியல் அகழ்விலே ஈடுபட முடியாது. அவ்வாறாக அனுமதிப் பத்திரம் பெறாமல் செய்யப்படுகின்ற அகழாய்வுகள் தண்டனைக்கு உட்படுத்தக்கூடிய குற்றங்கள் என்று சொல்லப்படுகின்றது. இவை தண்டனைக்குரிய குற்றங்களாக 1998 இலும் 2005 இலும் வந்த திருத்தங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அதன் பிரகாரம் குறைந்தது 2 வருடங்களும் ஆகக் கூடியதாக 5 வருடங்களும் தண்டனைக்கு உட்படுத்தப்படலாம். அதிலே குறிப்பாக சொல்லப்படுகின்ற விடயம் என்னவென்றால் வெறுமனே அனுமதியின்றி செய்யப்படுகின்ற அகழாய்வுகள் மாத்திரமல்லாமல் தொல்லியல் சின்னங்களை அல்லது தொல்லியல் பொருட்களை பாதித்தல், அவற்றை அழித்தல், உருமாற்றம் செய்தல் போன்ற விடயங்கள் கூட குற்றத்திற்கு உரிய விடயங்களாக சொல்லப்பட்டுள்ளன.

இதிலே மிக முக்கியமான விடயம் இந்த சட்டத்தினுடைய பிரிவு 15ஊ இன் கீழ் குறித்த குற்றமானது பிணை வழங்கப்பட முடியாத ஒரு குற்றமாக சொல்லப்படுகிறது. அதாவது தொல்லியல் சின்னமாக அறிவிக்கப்பட்ட இடத்திற்குள் நீங்கள் நுழைந்து ஒரு வேலையை செய்வீர்களாக இருந்தால் அல்லது அங்கு தொல்லியல் சின்னத்தில் ஏதேனும் மாற்றங்களை ஏற்படுத்தும் விதமாக நீங்கள் செயற்படுவதாக கருதினால் அதற்காக நீங்கள் கைது செய்யப்பட்டால் உங்களுக்கு பிணை வழங்கப்பட முடியாது என 15ஊ ஏற்பாடு சொல்கின்றது. இது ஒரு முக்கியமான விடயம். ஏனென்றால் பிணை வழங்கப்பட முடியாத குற்றங்கள் என்று மிகச் சிறிய அளவிலான குற்றங்கள் தான் வகைப்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழான குற்றங்கள் அல்லது பொதுச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்துவது போன்ற குற்றங்கள் என்று மிக குறிப்பிட்ட குற்றங்கள் தான் பிணை வழங்கப்பட முடியாத குற்றங்களாக சொல்லப்படுகின்றன. அந்த வகையிலே இந்த 15ஊ இன் கீழ் தொல்லியல் விடயங்கள் தொடர்பாக இழைக்கப்படுகின்ற குற்றங்களும் பிணை வழங்கப்பட முடியாத குற்றங்களாக இருக்கின்றன என்பது பலரும் அறியாத உண்மை.

அடுத்தது மிக முக்கியமான விடயம், 1815க்கு முற்பட்ட அதாவது இலங்கையை ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்படுத்தப்படுவதற்கு முன்னரான காலப்பகுதிக்கு உரிய அந்த கட்டிடங்கள் தான் தொல்பொருள் சின்னங்கள் எனப்படும். ஆனால் பிரிவு 16 இன் பிரகாரம் எல்லையில்லா அதிகாரம் ஒன்று அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒரு வர்த்தமானி அறிவித்தல் மூலமாக 1815 பங்குனி மாதம் 2 ஆம் திகதிக்கு பிற்பட்ட ஒரு கட்டிடத்தையும் தொன்மையான கட்டிடம் என அறிவித்து பிரசுரிக்கும் ஏற்பாடுகளை சட்டத்திலே கொண்டு வந்திருக்கிறார்கள்.

குருந்தூர் மலையின் பிரச்சனை பற்றி பேசுவோம். அங்கு இருக்கக்கூடிய விகாரையை இந்த பிரிவு 16 இன் கீழ் தான் 2013 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15 ஆம் திகதி தொல்லியல் திணைக்களத்தை உள்ளடக்கிய தேசிய பாரம்பரிய அமைச்சுக்கு பொறுப்பாக இருந்த (minister for national heritage) கலாநிதி ஜெகத் பாலசூரிய ஒரு வர்த்தமானி அறிவித்தலின் கீழ் ஒரு தொன்மைக்கு உரிய சாதனமாக அறிவித்திருக்கிறார்.

இதிலே கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல தொல்லியல் சின்னங்களுக்கான வரைவிலக்கணம் 1815க்கு முற்பட்டதாக இருக்க வேண்டும். ஆனால் குருந்தூர் மலையில் இருக்கக் கூடிய விகாரையானது மகாவம்ச காலத்திலிருந்து இருக்கின்ற ஒரு விடயம் என்று சொல்லப்பட்டாலும் அமைச்சரால் விடுக்கப்பட்ட இந்த அறிவித்தலானது பிரிவு 16 இன் கீழ் செய்யப்பட்ட ஒரு பிரகடனம் என்பதனை கவனிக்க வேண்டும். அது 1815 க்கு பின்னரான ஒரு தொல்லியல் சின்னம் என்று தான் அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே இலங்கை அரசாங்கத்தின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் குருந்தூர் மலை விகாரை 1815க்கு பிற்பட்டது என்பதாகத் தான் பொருள்கோடல் செய்ய வேண்டும். இதற்கு பின்னால் உள்ள உண்மையை நாங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். பிரிவு 16 இல் வரலாற்று ரீதியாக, விஞ்ஞான ரீதியாக உறுதிப்பாடு இல்லாமல் ஒரு குறிப்பிட்டதை தொல்லியல் சின்னம் என்று அறிவிப்பதற்கு அமைச்சருக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கிறது. எந்த அளவுகோல்களின் அடிப்படையில் அவை தொல்லியல் சின்னங்களாக அறிவிக்க வேண்டும் என்பது தொடர்பாகவும் சட்டம் எதுவும் சொல்லவில்லை.

ஆகவே ஒரு அமைச்சர் தான்தோன்றித்தனமாக தற்துணிவின் அடிப்படையிலே ஒரு குறிப்பிட்ட கட்டிடத்தை அல்லது பொருளை அல்லது ஒரு இடத்தை தொல்லியல் சின்னம் என்று அறிவிக்கக்கூடிய ஒரு ஏற்பாட்டை சட்டம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. அந்த ஏற்பாட்டைப் பாவித்து தான் குருந்தூர் மலையில் இருக்கக்கூடிய விகாரையையும் தொல்லியல் சின்னம் என அவர்கள் அறிவித்து இருக்கின்றார்கள். இதனை 15.08.2013 திகதியிட்ட இலக்கம் 1823 / 73 என்ற வர்த்தமானி மூலமாக நாங்கள் அறியக்கூடியதாக இருக்கிறது.

இதில் இன்னொரு வினோதமான பிரிவு இருக்கிறது. அது பிரிவு 16க்கு அடுத்ததாக வருகின்ற பிரிவு 17. ஒரு மரத்தைக் கூட தொன்மையான கட்டிடமாக கருதலாம் என பிரிவு 17 சொல்கிறது. இது எதனை குறிக்கின்றது என்பதை உங்களால் ஊகிக்கக் கூடியதாக இருக்கலாம். ஆனால் இலங்கையில் மாத்திரம் தான் மரங்களை தொல்லியல் சின்னங்களாக சொல்லக்கூடிய ஏற்பாடு இருக்கிறது. ஒப்பீட்டு தொல்லியல் சட்டங்களை, வேறு நாடுகளின் சட்டங்களை படிப்பவர்கள் இதைப்பற்றி எங்களுக்கு சொல்லலாம். உயிர்பல்வகைமையை பேணுவதற்காக ஒரு மரத்தை பாதுகாக்க சட்டம் சொல்லலாம். ஆனால் ஒரு மரத்தை தொல்லியல் விடயமாக தொல்லியல் சார்ந்தது என்று சொல்லுகின்ற ஏற்பாடு இலங்கையில் மாத்திரம் தான் இருக்கின்றது என்பதனை பிரிவு 17 ஐ படிக்கின்றபோது விளங்கிக் கொள்ளலாம். ஆகவே உங்களுடைய வீட்டிலே வளர்கின்ற மரத்தைக் கூட தொல்லியல் சின்னமாக அறிவிப்பதற்கு இந்த சட்டத்தின் கீழே அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அடுத்ததாக முக்கியமான பிரிவு பாதுகாக்கப்பட்ட சின்னங்கள் (protected monuments) பிரிவு. தொன்மையான கட்டிடம் அல்லாத ஒரு கட்டிடத்தை பாதுகாக்க வேண்டுமென்றால் இந்த 18 ஆவது பிரிவின் கீழ் முன்னறிவித்தலை வழங்கலாம். அதற்கு ஆட்சேபனைகளை யாரும் தரலாம் என்று சொல்லி அதற்குரிய சந்தர்ப்பத்தையும் வழங்கிய பின்னர் தான் ஒரு கட்டிடத்தை பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கலாம். ஆனால் எனது பார்வையில் 18 இன் கீழ் முன்னறிவித்தல் கொடுத்து ஆட்சேபனை பெறுவதற்கான சந்தர்ப்பம் கொடுத்து அதன் பின்னர் தான் அது பாதுகாக்கப்பட்ட சின்னமாக வரவேண்டும் என்ற தேவைப்பாட்டை சட்டம் சொல்கின்றபடியால் அதை தவிர்ப்பதற்காக பிரிவு 16 இன் கீழ் போய் 1815க்கு பிற்பட்ட குருந்தூர்மலை போன்றவற்றை கூட அவர்கள் தொல்லியல் சின்னமாக அறிவிக்கின்றார்கள்.

1815க்கு பின்னரான தொல்லியல் சின்னம் என்ற வகைக்குள் வராத கட்டிடங்களை பாதுகாக்கப்பட்ட கட்டிடங்கள் (protected monuments) என்ற வகைக்குள் அறிவிப்பதாக இருந்தால், பிரிவு 19 இன் பிரகாரம் அதற்குரிய முன்னறிவித்தல் வழங்கப்பட்டு, சம்பந்தப்பட்ட நபர்கள் ஆட்சேபனை தெரிவித்தால், அதன் மீது விசாரணை நடாத்தி அதன் பின்னர் தான் அவ்வாறு அறிவிக்கலாம் என்று சொல்லப்படுகின்றது. அது தனியார் ஒருவரின் காணியில் இருந்தால் பிரிவு 20 ஆனது அவர்களுடன் ஒரு எழுத்து மூலமான ஒரு உடன்படிக்கைக்கு செல்ல வேண்டும் என்று சொல்கிறது. பிரிவு 21 முக்கியமானது. இதன் பிரகாரம் எந்தவொரு புராதன கட்டிடத்தின் மீதும் வேலை செய்வதாயின் அதற்கான அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறாக அனுமதி பெறப்படாவிடின் அதற்கும் ஏற்கனவே குறிப்பிட்டது போல குறைந்தது 2 வருடங்களும் ஆகக் கூடியது 5 வருடங்களும் தண்டனை விதிக்கப்படும்.

இதிலிருந்து நாங்கள் அடுத்து தொல்லியல் காப்பகம் (Archeology Archive)என்றவிடயத்திற்குவருகின்றோம். அதன் பிரகாரம் அரச காணியை தொல்லியல் காப்பகம் என்ற வகைக்குள் கொண்டு வந்து அதனை அறிவிப்பதற்கான ஏற்பாட்டை செய்திருக்கின்றார்கள். அதாவது ஒரு குறிப்பிட்ட பிரதேசமானது பாதுகாக்கப்பட்டது என்று சொல்லும் போது ஏக்கர் கணக்கான காணியை பற்றி பேசுகின்றோம். குறிப்பிட்ட பிரதேசமானது ஒரு தொன்மையான தொல்லியல் ரீதியாக முக்கியமான இடம் என்று பிரிவு 33 இன் கீழ் தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமானவர் அறிவிக்கலாம். காணி ஆணையாளரின் அனுமதியோடு அல்லது காணி ஆணையாளரின் அனுமதி பெறப்படாதவிடத்து தனது துறைக்குரிய அமைச்சரிடமிருந்து அனுமதியை பெற்று அந்த இடத்தை தொல்லியல் காப்பகமாக அவர் அறிவிக்கலாம். அவ்வாறாக பாதுகாக்கப்பட்ட பிரதேசம் (Archaeological Reserve) என்று அறிவிக்கப்பட்ட பிரதேசத்திற்குள் யாரும் விவசாயம் செய்ய முடியாது. எந்தவொரு கட்டிடமும் அமைக்க முடியாது. ஒரு மரத்தையேனும் வீழ்த்த முடியாது. அவ்வாறு செய்யுமிடத்து அவர்களுக்கு எதிராக தொல்லியல் தண்டனை சட்டக் கோவையின் கீழ் வழக்கு தொடரப்பட்டு 3 மாதம் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் என இந்த சட்டம் குறிப்பிடுகின்றது.

12ஆம் பக்கம் பார்க்க...

**கலாநிதி க.குருபரன்**

# காசாவில் இன அழிப்பு - சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாபிரிக்கா மனு

**மேற்கு சார்ந்த செல்லப்பிள்ளை அரசியலும். இந்தியாவின் ஓரவஞ்சகமும் - ஈழத் தமிழர்களுக்குரிய நகர்வைத் தடுத்ததா?**





பலஸ்தீன மக்கள் மீது இன அழிப்பு நடைபெறுவதாகவும் அந்தப் பெரும் சர்வதேசக் குற்றத்துக்கு இஸ்ரேலின் அரசு பொறுப்பு விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும் என்றும் காசா மீது மேற்கொண்டுள்ள படையெடுப்பை உடனடியாக விலத்திக்கொள்ளும் ஆணையையும் பிறப்பிக்கவேண்டும் என்றும் கோரி தென்னாபிரிக்க அரசு சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ள வரலாற்று முக்கியத்துவமான சர்வதேசச் சட்ட நகர்வு டிசம்பர் 29 ஆம் திகதியன்று நடைபெற்றுள்ளது. எண்பத்து நான்கு பக்கங்கள் நீளமான தென்னாபிரிக்காவின் குற்றப்பத்திரிகை கிடைத்துள்ளதை சர்வதேச நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது மட்டுமல்ல, உடனடி நடவடிக்கை தொடர்பான பகிரங்க இரண்டு நாள் அமர்வுகளை ஜனவரி 11 ஆம் 12 ஆம் திகதிகளில் நடாத்தவுள்ளதாகவும் அறிவித்துள்ளது.



ஈழத்தமிழர் மீது இதேபோன்று நடாத்தப்பட்ட இன அழிப்புப் போருக்கு எதிராக தென்னாபிரிக்காவை நகரவைப்பதில் ஈழத்தமிழரின் மேற்கு சார்ந்த “செல்லப்பிள்ளை அரசியல்” தவறியுள்ளதா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளை இந்தியாவின் ஈழத்தமிழர் தொடர்பான “ஓரவஞ்சக அரசியல்” பாதித்துள்ளதா, தென்னாபிரிக்காவின் வெளியுறவுக்கொள்கை இலங்கை ஒற்றையாட்சி அரசைத் தனது நட்புச்சக்தியாக்கும் “தென்னுலக நலன் சார்ந்த அரசியல்” காரணமாகின்றதா என்ற கேள்விகள் எழுகின்றன.

எதிர்பார்த்தது போல் இஸ்ரேல் தனது கடும்எதிர்ப்பை தென்னாபிரிக்கா மீது ஊடக வெளியில் காட்டியுள்ளது. அமெரிக்காவும் கண்டித்துள்ளதாக இஸ்ரேல் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. இருந்தபோதும், சர்வதேச நீதிமன்றில் தனது சார்பான சட்ட நிபுணர்களையும் அனுப்பி வாதிடவேண்டிய நிலைக்கு இஸ்ரேல் தள்ளப்பட்டுள்ளது.

சர்வதேசத் தளத்தில் தென்னாபிரிக்காவின் இந்தத் துணிகர நடவடிக்கை கவனத்தை ஈர்த்துள்ளது மட்டுமல்ல பெரும் ஆதரவையும் பெற்றுவருகிறது. வேறு நாடுகளும் இந்த நகர்வில் தம்மை இணைத்துக்கொள்ளும் வாய்ப்பும் உள்ளதாக அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.


ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இஸ்ரேலுக்கு எதிராக எந்தவித கடும் நடவடிக்கையையும் ஏற்படுத்தவிடாது தடுத்துக்கொண்டிருக்கும் அமெரிக்காவின் சர்வதேச அரசியலுக்கு எதிரான சவாலைத் தனது சர்வதேச சட்ட நகர்வால் தென்னாபிரிக்கா எதிர்கொள்ளத் துணிந்துள்ளமைக்கு மாறியுள்ள உலக ஒழுங்கு காரணமாகிறது.

திட்டமிடப்பட்ட பாரிய இன ஒடுக்குமுறையில் இருந்து அரசியல் விடுதலை பெற்றுத் தனி அரசாக இயங்கி வரும் தென்னாபிரிக்க பலஸ்தீன விவகாரத்தில் கூடுதல் அக்கறை செலுத்துவது பாராட்டுக்குரியது.

2009 இல் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இன அழிப்புத் தொடர்பாக எந்த ஒரு சர்வதேசச் சட்ட நகர்வையும் முன்னெடுக்கத் தென்னாபிரிக்க அரசு இதுவரை முன்வரவில்லை. மாறாக, அரசியல் தீர்வு எதுவுமற்ற போலியான நல்லிணக்க அரசியலை நோக்கியே அதன் சார்புநிலை இருந்துவந்துள்ளது.

இதை மாற்றுவதற்கு ஈழத்தமிழர்களின் தரப்பு அர்த்தமுள்ள முயற்சிகள் எதையும் மேற்கொள்ளத் தவறியது ஏன் என்ற கேள்வியும் இங்கு முன்வைக்கப்படவேண்டியது.

தென்னாபிரிக்காவின் நோபல் பரிசு பெற்ற ஆயர் டெஸ்மன்ட் டூட்டு போன்றவர்களோடு ஏதோ ஒரு வகையில் உறவை உருவாக்கியிருந்த அருட்தந்தை எஸ்.ஜே.இமானுவல் போன்றோர் இஸ்ரேல் சார்பான அமெரிக்க வழிநடத்தலுக்கு பலிக்கடா ஆனது உட்பட்ட பல தொலைநோக்கற்ற தவறுகளை 2009 இற்குப் பின்னர் ஈழத்தமிழர்களின் சர்வதேச அணுகுமுறை கைக்கொள்ளத் தவறியுள்ளது வெளிப்படை.



ஒரு சிலரை மட்டும் இதற்கான காரணங்களாகக் குற்றம் சுமத்துவதற்குப் பதிலாக சர்வதேச நீதி தொடர்பாக ஈழத்தமிழர்கள் மீண்டும் மீண்டும் தவறாகப் பலியிடப்படுவதற்கான வழிநடத்தல் அல்லது மூலகாரணங்கள் எவை என்று ஆராய்வது எதிர்கால வழிவரைபடத்துக்கு ஆரோக்கியமானது.

ஓர் அரசியற் துன்பியல் வரலாறாகப் புரண்டு ஓடியுள்ள கடந்த பதினான்கு வருடங்களில் தென்னாபிரிக்காவுக்கோ அல்லது வேறு உலக ஒழுங்குகளைச் சிந்திக்கத் தலைப்படும் எந்த ஒரு நாட்டுக்குமோ பயணித்து ஈழத்தமிழர் மீதான இன அழிப்புத் தொடர்பாக தமிழ்த்தேசிய அரசியலில் ஈடுபடும் எவரும் விபரித்துப் பேசியிருக்கவில்லை. “செல்லப்பிள்ளை அரசியல்” என்ற மனநிலை இதற்குத் தடையாக இருந்துள்ளது.

ஆனால், சிங்கள ஆட்சியாளர் தரப்பில், மகிந்த ராஜபக்ச இலங்கை ஒற்றையாட்சி அரசின் ஜனாதிபதியாகப் பதவி வகித்திருந்தபோதுகூட தென்னாபிரிக்காவில் அப்போது அமைச்சராக இருந்த தற்போது ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் சிறில் ரமபோசாவுடன் தந்திரோபாய உறவை நெருக்கமாகப் பேணியிருந்தார். ரமபோசாவும் மகிந்தவுடன் நெருங்கிய நண்பராக இருந்து கொழும்புக்கு வந்து சென்றிருக்கிறார்.

அப்போதைய தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜாக்கோப் சூமா இலங்கைக்கும் தென் சூடானுக்குமான விசேட தூதராக சிறில் ரமபோசாவை 2014 ஆம் ஆண்டில் நியமித்திருந்தார். அப்போது பொதுநலவாயக் கூட்டின் சந்திப்பை அடுத்த நகர்வாக அது அமைந்திருந்தது.

அதன்போது, மேற்கு நாடுகளின் ஆதரவோடு நல்லிணக்க அரசியல் தூதராக ரமபோசா செயற்பட்டது மட்டுமல்ல, சிங்களத் தரப்போடும் நல்லுறவை வெளிக்காட்டியிருந்தார். தற்போது அவரே தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியாகியுள்ள சூழலில், அவரின் கருத்தில் தாக்கம் ஏற்படுத்த தமிழ்த் தரப்பு கடுமையாக உழைக்கவேண்டியிருக்கும். தற்போது மேற்கோடு அவரது அரசியலுக்கு கணிசமான விரிசல் ஏற்பட்டுள்ளது என்பது இங்கே கவனிக்கப்படவேண்டியது.

தென்னாபிரிக்காவில் புலம்பெயர்ந்து வாழக்கூடிய தமிழர்களால் இது தொடர்பில் இதுவரை எந்த முனைப்பையும் மேற்கொள்ள இயலாமற்போயிருந்தாலும் இனியாவது ஆக்கபூர்வமான நகர்வுகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

இன அழிப்பை நுட்பமாக மறுத்து போர்க்குற்றங்களை இரண்டு தரப்புகளும் புரிந்தன என்ற கருத்தியலை மட்டும் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் முன்னெடுக்கின்ற அணுகுமுறையைத் தென்னாபிரிக்கத் தமிழரான நவநீதம்பிள்ளை அம்மையாரே துணைபோயிருந்தார்.

11ஆம் பக்கம் பார்க்க...



# பிராந்திய செய்திகள்



## யாழ்.மாவட்டத்தில் 4,269 டெங்கு நோயாளர்கள்

யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் 4,269 பேர் டெங்கு நோய் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் (02) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், கடந்த மாதம் டிசம்பரில் அதிகளவில் டெங்கு நோயாளிகள் இனங் காணப்பட்டுள்ளனர். யாழ். போதனா வைத்தியசாலையில் 2022 ஆம் வருடம் 2,505 பேர் டெங்கு காய்ச்சலுக்கு சிகிச்சை பெற்றுள்ளனர். கடந்த டிசம்பர் மாதம் 3 மரணங்கள் பதிவாகியுள்ளது.

2022ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டில் சுமார் ஆயிரம் பேர் வரையானோருக்கு அதிகமாக டெங்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

கடந்த மாதம் பெய்த தொடர்ச்சியான மழை காரணமாக டெங்கு பரவல் அதிகரித்தது. யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இடங்களில் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்து காணப்படுகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் அதிகரித்துள்ள நிலையில் பொது மக்கள் தங்கள் உடல்நிலை தொடர்பாக கவனம் செலுத்தவேண்டும். எனவே பொது மக்கள் தங்கள் சார்ந்த இடங்களை சுத்தமாக வைத்திருக்கவேண்டும் என யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி சுட்டிக்காட்டினார்

## தட்டம்மை தடுப்பூசியை மேலதிகமாக வழங்க முடிவு



04 மாவட்டங்களில் (06) முதல் தட்டம்மை தடுப்பூசியை மேலதிகமாக வழங்க விசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

தட்டம்மை தடுப்பூசியை மேலதிகமாக வழங்க உலக சுகாதார நிறுவனம் ஒப்புதல் அளித்துள்ளதாகவும் டொக்டர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டம் 2 கட்டங்களாக அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் டொக்டர் பாலித மஹிபால குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நாடளாவிய ரீதியில் ஒரு வார கால டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுகாதார பூச்சியியல் அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் நிஜித் சுமனசேன வலியுறுத்தியுள்ளார்.

## போராடியவர்களுக்கு விளக்கமறியல் - வவுனியாவில் சம்பவம்



வவுனியாவிற்கு (05) காலை வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாநகரசபை கலாச்சார மண்டபத்தில் அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்களுடான கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார். ஜனாதிபதியின் விஜயத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கலந்துரையாடல் இடம்பெற்ற மண்டபத்திற்கு செல்லும் பாதையில் வட கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு தமது எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றாவுக்கு போராட்டம் எதனையும் முன்னெடுப்பதற்கு நீதவான் நீதிமன்றம் தடை விதித்திருந்த நிலையிலும் அவரும் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்காக நிகழ்வு இடம்பெற்ற மண்டபத்திற்குள் செல்ல முற்பட்ட போராட்டகாரர்களை தடுத்து நிறுத்திய பொலிஸார் ஜனாதிபதியை சந்திப்பதற்கு அனைவருக்கும் அனுமதி வழங்க முடியாது என்றும் ஒருவருக்கு மாத்திரம் அனுமதி வழங்க முடியும் என்றும் தெரிவித்தனர். இதனை மறுத்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அனைவரையும் அனுமதிக்குமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

இதனையடுத்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றா மற்றும் போராட்டத்தினை காணொளி எடுத்த மீரா ஜாஸ்மின் சார்ல்ஸ்நையஸ் ஆகிய பெண்ணும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். இவ் கைது நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட இருவருக்கும் பொலிஸாருக்கிடையே தர்க்கமும் ஏற்பட்டிருந்தது. பெண் பொலிஸாரினால் இருவரும் பேருந்தில் ஏற்றப்பட்டு கைது செய்யப்பட்டார்

கைது செய்யப்பட்ட இருவர் மீதும் நீதிமன்ற கட்டளையினை அவமதித்தமை, பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியமை, அமைதிக்கு பங்கம் விளைவித்தமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களில் வவுனியா பொலிஸார் அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றாவை எதிர்வரும் 8ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் போராட்டத்தினை காணொளி எடுத்த பெண்ணிற்கு பிணை வழங்கி வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்ற உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## ஜனாதிபதியின் விசேட அறிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வவுனியா மாவட்ட கலாசார மண்டபத்தில் (05) நடைபெற்ற வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கான விசேட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில், "எமது நாட்டின் பொருளாதாரத்திற்கு ஒரு எஞ்சின் மாத்திரமே உள்ளது. அதற்கு 50% பங்களிப்பு மேல் மாகாணத்திலிருந்தே பெறப்படுகிறது. மற்றைய மாகாணங்களிலிருந்து கிடைக்கும் பொருளாதார பங்களிப்பு மந்தமான நிலையிலேயே உள்ளது.

நாடு என்ற வகையில் முன்னேறிச் செல்வதற்கு எஞ்சின்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும். அதற்காக மற்றைய மாகாணங்களின் பொருளாதாரத்தையும் பலப்படுத்த வேண்டும். அதற்காக சில மாகாணங்கள் அறியப்பட்டுள்ளன. வடக்கு, மேற்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்கள் இலங்கையின் தேசிய பொருளாதாரத்திற்கு பெருமளவான பங்களிப்பை வழங்கும் மாகாணங்களாக மேம்படுத்தப்பட வேண்டும். தற்போது நிதிபலமும் இருப்பதால் இடைநிறுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை மீள ஆரம்பிக்க முடியும். அதேபோல் வெளிநாட்டு நிதியில் முன்னெடுக்கப்படும் திட்டங்களை தொடர்வதற்கான உதவிகளும் கிடைக்கப்பெறவுள்ளன.

மேலும் வட மாகாணத்திடமிருந்து இந்நாட்டின் அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. வட மாகாணத்திலிருந்து காற்று மற்றும் வெப்ப நிலை காரணமாக மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி தயாரிப்புக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. வட மாகாணத்தில் தயாரிக்கக்கூடிய மின்சாரத்தின் அளவை கணக்கிட்டு பார்க்கும் போது எஞ்சிய தொகையை இந்தியாவுக்கு விற்பனை செய்து பணம் பெறக்கூடிய நிலையும் உள்ளது. அதற்கான பேச்சுவார்த்தைகள் தற்போதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வட மாகாணத்தின் விவசாயிகள் திறமையும் செயற்திறனும் கொண்டவர்கள். விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் வட மாகாணத்தின் விவசாய நிலங்களை முகாமைத்துவம் செய்வதன் வாயிலாக ஏற்றுமதி விவசாய தொழிற்துறையை பலப்படுத்தலாம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான குலசிங்கம் திலீபன். வவுனியா மாவட்டத்தில் காணி விடுவிப்பு தொடர்பான அறிவிப்பு முதன்முறையாக வனவள திணைக்களத்தினால் வெளியிடப்பட்டது. அதற்காக ஜனாதிபதி மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நன்றி தெரிவிக்கின்றேன். வவுனியா மாவட்டத்தில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஆலோசனையை ஜனாதிபதி முன்வைத்துள்ளார். அதற்கு தேவையான மேய்ச்சல் நிலங்களை விடுவிக்குமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், ஜனாதிபதியின் வருகைக்கு நன்றி தெரிவிக்கிறோம். வரவு செலவுத்திட்ட கூட்டத்தொடரின் போது மூன்று அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் கூறப்பட்டது. அவர்களில் இருவரை நீங்கள் விடுவித்துள்ளீர்கள். அதற்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ். நோகராதலிங்கம், ஜனாதிபதியின் வருகைக்கு நன்றி தெரிவிக்கிறோம். வவுனியாவில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் புதிய பொருளாதார மத்திய நிலையத்தை மக்கள் பாவனைக்காக திறந்து வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இறுதி யுத்தத்தின் போது கைது செய்யப்பட்ட சுமார் 12 அரசியல் கைதிகள் இன்னமும் உள்ளதாகவும். அவர்களை விடுவிக்க அல்லது பிணையில் விடுவிக்க விசேட அனுமதி வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், யுத்தம் நிறைவடைந்தாலும் வவுனியாவில் அபிவிருத்திப் பணிகள் குறிப்பிடத்தக்க அளவில் நடைபெறவில்லை. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தி வருகின்றார்.

காணி விடுவிப்புப் பணிகளை நீங்கள் நம்பிக்கையுடன் ஆரம்பித்துள்ளதால், அதற்கு உரிய தீர்வுகள் கிடைக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம். மேலும், மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகளின் அபிவிருத்திப் பணிகளை விரைவாக மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.



# சினி துளிகள்





## விடாமுயற்சி - திரிஷா கேரக்டர் பெயர் என்ன தெரியுமா?

துணிவு படத்தின் வெற்றியை தொடர்ந்து அஜித் குமார், மகிழ் திருமேனி இயக்கத்தில் உருவாகி வரும் விடாமுயற்சி படத்தில் திரிஷா நடித்து வருகிறார்.

இந்த இப்படத்தின் ஷூட்டிங் முழுக்க முழுக்க வெளிநாட்டில் நடந்து வருகிறது. ஆக்ஷன் திரில்லராக உருவாகும் இப்படத்திற்கு திரிஷா, அர்ஜூன், ஆரவ் எனப் பல பிரபலங்கள் நடித்து வருகின்றனர்.

இந்நிலையில் திரிஷா இந்தப் படத்தில் கயல் என்ற கேரக்டரில் நடித்து வருவதாக தகவல் கசிந்துள்ளது. தற்போது அஜித் - திரிஷா இடையிலான காம்பினேஷன் காட்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக சொல்லப்படுகிறது.

முன்னதாக விடாமுயற்சி படத்தில் அஜித்தின் கதாபாத்திரத்தின் பெயர் அர்ஜூன் என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

## விஜயின் 68வது படத்தில் இணைந்துள்ள பிரபல நடிகை




வெங்கட் பிரபு, அஜித்தை வைத்து மங்காத்தா படத்தை இயக்கியதில் இருந்து ரசிகர்கள் அவரிடம் கேட்கும் ஒரே கேள்வி எப்போது விஜயை வைத்து படம் இயக்குவீர்கள் என்று தான்.

அவரும் தளபதி ஒப்புக்கொண்டால் உடனே படம் இயக்கலாம் என எல்லா பேட்டிகளில் கூறியிருந்தார்.

அதற்கு ஏற்றார் போல் இப்போது விஜய் - வெங்கட் பிரபு கூட்டணி அமைந்து படப்பிடிப்புகளும் வேகமாக நடந்து வருகிறது.

ஏஜிஎஸ் நிறுவனம் தயாரிக்க, யுவன் இசையமைப்பில் தயாராகும் இப்படத்தில் கணக்கிட முடியாத அளவிற்கு ஏகப்பட்ட பிரபலங்கள் நடிக்கிறார்கள்.

The Greatest Of All Time என பெயரிடப்பட்டுள்ள இப்படத்தில் விஜய், பிரபுதேவா, பிரசாந்த், மோகன், சினேகா, லைலா, ஜெயராம் என ஏகப்பட்ட பிரபலங்கள் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

தற்போது படம் குறித்து வந்த அப்டேட் என்னவென்றால் இந்த படத்தில் புதியதாக பார்வதி நாயர் இணைந்துள்ளாராம்.

இவருக்கு மிகவும் முக்கியமான கதாபாத்திரம் என கூறப்படுகிறது. அஜித்தின் என்னை அறிந்தால் படத்திற்கு பிறகு இவருக்கு பெரிய படம் அமைந்துள்ளது என ரசிகர்கள் வாழ்த்து கூறி வருகிறார்கள்.

## யூடியூப் சேனல்கள் குறித்து நடிகை மஞ்சிமா மோகன் வேதனை



நடிகை மஞ்சிமா மோகன் ஒரே ஒரு படம் மூலம் பெரிய அளவில் கொண்டாடப்பட்ட ஒரு பிரபலம்.

2016ம் ஆண்டு அச்சம் என்பது மடமையடா திரைப்படத்தின் மூலம் தமிழ் திரையுலகில் அறிமுகமான இவர் 2017ம் ஆண்டு சத்ரியன், இப்படை வெல்லும், தேவராட்டம், Tughlaq Durbar, FIR என படங்கள் நடித்து வந்தார்.

பின் நடிகர் கௌதம் கார்த்திக்கை காதலித்து மிகவும் சிம்பிளாக திருமணமும் செய்துகொண்டார்.

இந்த நிலையில் நடிகை மஞ்சிமா மோகன் வேதனையாக ஒரு விஷயத்தை கூறியுள்ளார்.

சில யூடியூப் சேனல்கள் உண்மையிலேயே பயனுள்ளதாக உள்ளன. ஆனார் சிலர் வேலையில்லாமல் தவறான தகவல்களை பரப்புகின்றனர்.

அதிலும் குறிப்பாக உங்களைப் பறி நல்லதாக கூற அவர்களுக்கு நீங்கள் பணம் தரவில்லை என்றால் கேவலமாக பேசுவார்கள்.

மற்றவர்களின் வேலையை விமர்சிக்க அனைவருக்கும் உரிமை உள்ளது, ஆனால் லைக்குக்காக பிறரை பற்றி தவறாக பேசுவது மரியாதையற்ற செயல் என கூறியுள்ளார்.

## ரூ.16 லட்சத்துடன் பிக்பொஸில் இருந்து வெளியேறிய பூர்ணிமாவிற்கு உற்சாக வரவேற்பு

பிக்பொஸ் 7 சீசன் 90 நாட்களை தாண்டி இறுதிக்கட்டத்தை எட்டி வருகிறது.

இதில் யார் வெற்றியாளர் என்பதை இன்னும் ரசிகர்கள் கணிக்கவே முடியவில்லை, இப்போது வீட்டில் 7 பேர் மட்டுமே உள்ளனர்.

ரூ.16 லட்சம் பணம் பிக்பொஸ் வீட்டில் வைக்க அதை எடுத்துக்கொண்டு தான் வீட்டைவிட்டு வெளியேறுவதாக கூறி பூர்ணிமா ரவி அதிரடி முடிவு எடுத்து வெளியேறினார்.

பிக்பொஸில் இருந்து வெளியே வந்தவருக்கு கோலாகலமான வரவேற்பு கொடுத்துள்ளனர் அவரது உறவினர்கள்.
ஆட்டம் பாட்டம் கொண்டாட்டத்துடன் தனது வீட்டிற்கு பூர்ணிமா சென்றுள்ளார்.



# எமது முன்னாள் ஜனாதிபதிகளின் அரசியல்

றொடீசியா என்று முன்னர் அழைக்கப்பட்ட ஆபிரிக்க நாடான சிம்பாப்வேயில் சிறுபான்மை வெள்ளையரின் ஆட்சிக்கு எதிரான கறுப்பின மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு தலைமை தாங்கியவர் றொபேர்ட் முகாபே. வெள்ளையர் ஆட்சிக்கு முடிவுகட்டப்பட்ட பிறகு அவர் 1980 தொடக்கம் 1987 வரை அந்த நாட்டின் பிரதமராகவும் 1987 தொடக்கம் 2017 வரை ஜனாதிபதியாகவும் பதவிவகித்தார். மொத்தமாக 37 வருடங்கள் அவர் ஆட்சியதிகாரத்தில் இருந்தார். அதிகாரத்தில் இருந்து இறங்கவிரும்பாமல் நீண்டகாலமாக பதவியில் இருந்த முகாபேயிடம் ஒரு தடவை செய்தியாளர் ஒருவர், "நீங்கள் எப்போது சிம்பாப்வே மக்களுக்கு பிரியாவிடை கொடுக்கப்போகிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு பதிலாக அவர், "ஏன் எனது நாட்டு மக்கள் வேறு எங்காவது போகப்போகிறார்களா?" என்று கிண்டலாக ஒரு கேள்வியைத்தான் கேட்டார்.

இன்னொரு தடவை வேறு ஒரு செய்தியாளர் முகாபேயிடம், "நீங்கள் எப்போது ஓய்வுபெறுவீர்கள்? உங்களுக்குப் பிறகு பதவிக்கு வரப்போகிறவர் யார்?" என்று கேட்டார். அதற்கு அவர், "எனக்கு ஓய்வுபெறும் நோக்கம் இல்லை. எனக்குப் பிறகு பதவிக்கு வருவதற்கு எவரையும் நான் நியமிக்கப்போவதில்லை. நான் 100 வயது வரை வாழ்வேன்" என்று பதிலளித்தார். அப்போது அவருக்கு 92 வயது. அந்தச் செய்தியாளர் தொடர்ந்தும் ஓய்வு குறித்து கேள்விகளைக் கேட்கவே முகாபே ஆத்திரமடைந்து, "நான் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்கிறேன் என்பதை உங்களுக்கு ஒரு குத்துவிட்டு நிலத்தில் வீழ்த்தித்தான் நிரூபித்துக்காட்டவேண்டும் என்று விரும்புகிறீர்களா?" என்று கேட்டார். சிம்பாப்வே மக்களுக்கு விடுதலை வேண்டிக்கொடுத்த முன்னாள் புரட்சிவாதி அதிகாரவெறி காரணமாக மிகவும் அவமானப்படுத்தப்பட்ட நிலையில் தான் பதவியில் இருந்து இறங்கவேண்டிவந்தது. முகாபேயின் கட்சியினரே அவருக்கு எதிராக சதி செய்து உப ஜனாதிபதியைப் பதவிக்குக் கொண்டுவந்தார்கள். அல்லாவிட்டால் அவர் இறங்கியிருக்கவே மாட்டார். இறுதியில் 2019 செப்டெம்பரில் தனது 95 வயதில் முகாபே மரணமடைந்தார்.

இவரைப் போன்றே ஆபிரிக்காவில் வெள்ளையர் ஆட்சியில் இருந்து கறுப்பின மக்களுக்கு விடுதலைப் பெற்றுக்கொடுத்த இன்னொரு வரலாற்று முக்கியத்துவம் கொண்ட போராட்டத்துக்கு தலைமை தாங்கிய ஒரு தலைவர் பதவி ஆசை கிஞ்சித்தும் இல்லாமல் அரசியல் ஞானியாக நடந்துகொண்ட காரணத்தால் உலகின் பெருமதிப்பைப் பெற்றார். அவர்தான் தென்னாபிரிக்காவின் நெல்சன் மண்டேலா. சிறுபான்மை வெள்ளையரின் இன ஒதுக்கல் ஆட்சி முடிவுக்கு வந்த பிறகு தென்னாபிரிக்காவின் முதலாவது கறுப்பின ஜனாதிபதியாக 1994ஆம் ஆண்டு பதவிக்கு வந்த மண்டேலா ஒரு ஐந்து வருடப் பதவிக்காலத்துக்குப் பிறகு 1999ஆம் ஆண்டில் பதவியில் இருந்து இறங்கி ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் அடுத்த மட்டத் தலைவர்களுக்கு வழிவிட்டார். அவர் தொடர்ந்தும் ஜனாதிபதியாக பதவியில் இருக்கவேண்டும் என்று விரும்பியிருந்தால் எவரும் எதிர்த்திருக்க மாட்டார்கள். 2004ஆம் ஆண்டு அரசியலில் இருந்து முற்றாக ஓய்வுபெற்றுக்கொண்ட மண்டேலா 2013 டிசம்பரில் தனது 95 வயதில் மரணமடைந்தார்.

தங்களது மக்களுக்கு வெள்ளையர் ஆட்சியில்இருந்துவிடுதலைபெற்றுக்கொடுத்த இரு ஆபிரிக்கத் தலைவர்களில் ஒருவர் பதவிவெறி காரணமாக சொந்த மக்களினால் வெறுக்கப்பட்டு அபகீர்த்திக்குள்ளான அதேவேளை, மற்றவர் பதவி ஆசையே இல்லாமல் இலட்சிய வாழ்க்கை வாழ்ந்தமைக்காக உலகில் எமது யுகத்தின் தலைசிறந்த அரசியல் ஞானிகளில் ஒருவராகப் போற்றப்படுவதைக் காண்கிறோம். இந்தக் கதைகளை இன்று கூறி ஒரு பீடிகையைப் போடுவது நாட்டின் உயர் பதவியை வகித்து பதவிக்காலம் முடிந்து வீட்டுக்கு போய்விட்ட பின்னரும் அரசியலைக்கைவிட மனமில்லாதவர்களைப் பற்றியும் மற்றும் அதிகாரத்தில் இருந்து மக்களால் விரட்டியடிக்கப்பட்டாலும் கூட மீண்டும் பதவிக்கு வருவதற்கு துடிக்கும் அரசியல்வாதிகளைப் பற்றியும் வெளியாகின்ற செய்திகள் மீது ஒரு பார்வையை செலுத்துவதற்கேயாகும்.

தற்போது இலங்கையில் நான்கு முன்னாள் ஜனாதிபதிகள் இருக்கிறார்கள். சந்திரிகா குமாரதுங்கவும் மஹிந்த ராஜபக்சவும் இரு பதவிக்காலங்களுக்கு அதிகாரத்தில் இருந்தவர்கள். மைத்திரிபால சிறிசேன ஒரு பதவிக்காலத்துக்கு மாத்திரம் அதிகாரத்தில் இருந்த அதேவேளை கோட்டபாயராஜபக்ஷதனதுபதவிக்காலத்தின் இடைநடுவில் கடந்த வருடம் மக்கள் கிளர்ச்சியை அடுத்து பதவியில் இருந்து விலகியவர். இவர்களில் எவருமே அரசியலில் இருந்து ஓய்வுபெறத் தயாராயில்லை. வாழும் முறையால் வழிகாட்டவேண்டும் என்று நினைக்கக்கூடிய அளவுக்கு நயநாகரிகம் இல்லாதவர்கள்.

திருமதி குமாரதுங்கவைப் பொறுத்தவரை பதவியில் இருந்து இறங்கிய பின்னர் அவரது அரசியல் ஈடுபாடு என்பது பெருமளவுக்கு ராஜபக்ஷர்களுக்கு எதிரான அணிதிரட்டல்களுக்கு உதவும் நோக்குடனேயே இருந்து வந்திருக்கிறது. மஹிந்தவுக்கு எதிராக இரு ஜனாதிபதித் தேர்தல்களில் எதிரணியின் பொது வேட்பாளர்களை களமிறக்குவதில் திருமதி குமாரதுங்க முன்னின்று செயற்பட்டார். மற்றும்படி முக்கியமான பிரச்சினைகள் தொடர்பில் அவ்வப்போது ஊடகங்களுக்கு நேர்காணல்களை வழங்குவது, அறிக்கைகளை வெளியிடுவதுடன் அவரது செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே உள்ளன.

கடந்த நூற்றாண்டில் ஐக்கிய தேசிய கட்சியின் 17 வருடகால ஆட்சிக்குப் பிறகு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவந்த பெருமைக்குரிய திருமதி குமாரதுங்க இந்த நூற்றாண்டின் முற்பகுதிவரை தங்களது குடும்பத்தின் தலைமைத்துவத்தில் இருந்த கட்சி இன்று சிறிசேனவின் தலைமைத்துவத்தில் மக்கள் செல்வாக்கை இழந்து நிற்பதை கைகட்டிப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டியிருக்கிறது. மீட்பு முயற்சி எதையும் முன்னெடுக்கக்கூடிய வல்லமை அவரிடம் இல்லை.

மஹிந்தவைப்பொறுத்தவரை 2005 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற பிறகு சுதந்திரக் கட்சியை பண்டாரநாயக்க குடும்பக் கட்சி என்ற நிலையில் இருந்து ராஜபக்ஷ குடும்பக் கட்சியாக மாற்றினார். இரு பதவிக் காலங்களுக்கு ஜனாதிபதியாக இருந்த அவரினால் 2015 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் சிறிசேனவிடம் தோல்விகண்ட பிறகு சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தை தங்கள் வசம் வைத்திருக்க முடியாமல் போய்விட்டது. பிறகு ராஜபக்ஷர்கள் தங்களுக்கென்றே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை தொடங்கி மீண்டும் ஆட்சியையும் பிடித்தார்கள். ஆனால், ராஜபக்ஷர்கள் கனவிலும் ஒருபோதும் நினைத்துப்பார்த்திருக்க முடியாத வகையில் கடந்த வருடம் மக்கள் கிளர்ச்சி அவர்களை அதிகாரத்தில் இருந்து விரட்டியது. ஆனால், மீண்டும் அதிகாரத்துக்கு வருவது குறித்து கனவுகண்டு கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையில் முன்னென்றும் இருந்திராத பல படுமோசமான தவறான அரசியல் மற்றும் ஆட்சிமுறைப் போக்குகளுக்கு வழிவகுத்தவராக விளங்கும் மஹிந்த நாட்டின் உயர்பதவியை வகித்துவிட்டு சாதாரண ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதில் எந்த அளெகரியத்தையும் எதிர்நோக்கியதாகத் தெரியவில்லை. 2015 ஆகஸ்ட் பொதுத்தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றத்தில் கூட்டு எதிரணியின் தலைவராக இருந்த அவர் 2020 பொதுத்தேர்தலில் போட்டியிட்டு தனது சகோதரரின் அரசாங்கத்தில் பிரதமராக பதவிக்கு வந்தார். அதற்குப் பிறகு நடந்தவை எல்லாம் அண்மைக்கால வரலாறு.

இலங்கையின் அரசியல் வரலாற்றிலே மக்கள் கிளர்ச்சியின் விளைவாக பதவியில் இருந்து இறங்கிய அரசாங்கம் என்றால் அது ராஜபக்ஷர் களின் அரசாங்கம்தான். 1953 ஆகஸ்ட் ஹர்த்தால் போராட்டம் பிரதமர் டட்லி சேனநாயக்கவின் அரசாங்கத்தை உலுக்கியது. எனினும், அவர் உடனடியாகப் பதவி விலகவில்லை. இரு மாதங்கள் கழித்து அக்டோபர் மாதமே அவர் பதவி விலகினார். முன்னரும் இலங்கை அரசியல் குறிப்பிட்ட சில உயர்வர்க்கக் குடும்பங்களின் ஆதிக்கத்தில் இருந்திருக்கிறது என்றபோதிலும் ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிராக வீதிகளில் இறங்கியதைப் போன்று அந்தக் குடும்பங்களுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழவில்லை. இத்தகைய வரலாற்று அவமதிப்புக்குள்ளான ஒரு குடும்பம் இன்னமும் கூட அரசாங்கத்தை பின்னணியில் இருந்து இயக்கக்கூடியதாக இருப்பது இலங்கை அரசியலின் ஒரு பெரிய முரண்நகையாகும்.

மஹிந்தவைப் பின்பற்றி முன்னாள் ஜனாதிபதி சிறிசேனவும் கடந்த பொதுத்தேர்தலில் அதுவும் பொதுஜன பெரமுனவுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்கு வந்தார். ஜனாதிபதியாக நாட்டை ஆட்சிசெய்த இலட்சணத்தில் மீண்டும் ஜனாதிபதியாவதற்கான தனது விருப்பத்தை அவர் இடைக்கிடை வெளியிடுவதையும் காணக்கூடியதாக இருக்கிறது. இரு முன்னாள் ஜனாதிபதிகள் இலங்கை நாடாளுமன்றத்தில் இருக்கிறார்கள். சந்திரிகா குமாரதுங்க மாத்திரம் அவ்வாறு செய்யவில்லை. அடுத்து கோட்டபாய ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வருவது குறித்து வெளிப்படையாக எதையும் பேசாவிட்டாலும், அவரைப் பயன்படுத்தி தங்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கை தேடிக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் சில சக்திகள் செயலில் இறங்கியிருக்கின்றன.

உலகின் வேறு எந்த நாட்டிலும் மக்கள் கிளர்ச்சியை அடுத்து வெளியேறிய எந்தவொரு தலைவரும் கோட்டபாய போன்று விரைவாக நாடு திரும்பக்கூடியதாக இருந்ததில்லை. வெளிநாடுகளில் தஞ்சமடைவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்காத நிலையில் அவருக்கு இப்போது இலங்கையைத் தவிர பாதுகாப்பான நாடு இல்லை என்ற நிலை. கோட்டபாய பதவி விலகிய பின்னர் அவரை மீண்டும் அரசியலுக்கு இழுப்பதற்கு விசுவாசிகள் பல தடவைகள் விருப்பத்தை வெளிப்படுத்திவந்தனர். கடந்த வருடம் ஆகஸ்டில் தாய்லாந்தில் தங்கியிருந்த வேளையில் கூட அவரை பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் மூலமாக நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவருவதற்கு உத்தேசிக்கப்பட்டதாகவும் அதற்கு வசதியாக தனது பதவியைத் துறக்க அந்தக் கட்சியின் பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பதவி துறக்கத் தயாராக இருந்ததாகவும் செய்திகள் வெளியாகின.

பிறகு ஒரு கட்டத்தில் கோட்டபாயவை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவந்து பிரதமராக்கவேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்றக் குழுவில் செல்வாக்கு மிக்க ஒரு பிரிவினர் முயற்சிப்பதாகவும் கூறப்பட்டது. ஆனால், இப்போது ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்காரவின் சகோதரர் ஹேமகுமார நாணயக்கார வசமிருந்த மௌபிம (தாய்நாடு) ஜனதா கட்சியை கோட்டபாயவின் நெருங்கிய சகாவும் பல ஊடக நிறுவனங்களின் உரிமையாளருமான திலித் ஜயவீர பொறுப்பேற்றிருப்பதாகவும் அதற்கு அவர் தனது ஆசீர்வாதத்தையும் ஆதரவையும் வழங்குவார் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கடந்த காலங்களில் செய்திகள் வெளியாகின.

மக்கள் கிளர்ச்சிக்கு வழிவகுத்த ஆட்சிமுறைத் தோல்விக்கு கோட்டபாய மாத்திரமே காரணம் என்று கூறி அவரை தனிமைப்படுத்த பொதுஜன பெரமுன முயற்சிக்கும் ஒரு நேரத்தில் - அதுவும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து பேசப்படும் நிலையில் அவர் தனது சகாவின் கட்சியை ஆதரிக்கக்கூடும் என்ற பேச்சுக்கள் கிளம்பியிருக்கின்றன. எது எவ்வாறிருந்தாலும், அவருக்கு அரசியலில் ஒரு இடத்தை தேடிப்பிடித்து கொடுப்பதற்கு விசுவாசிகள் இயன்றவரை முயற்சிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. வெளிநாட்டுக்குச் செல்லாமல் இலங்கையில் தொடர்ந்து வசிப்பதற்கு அவர் முடிவெடுத்தால் அவருக்கு எதிர்காலத்தில் 'சிறப்புரிமைகளுடன்' வாழ்வதற்கு குறைந்தபட்சம் நாடாளுமன்றத்தில் ஒரு ஆசனமாவது வேண்டாமா என்ன? இரு முன்னாள் ஜனாதிபதிகள் அதற்கு ஏற்கெனவே வழிகாட்டியிருக்கிறார்களே!

ராஜபக்ஷர்கள் என்னதான் மக்கள் ஆதரவை இழந்திருந்தாலும், அவர்களை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டுவரவேண்டும் என்று பாடுபடும் கணிசமான ஒரு பிரிவினர் இருக்கவே செய்கிறார்கள். ராஜபக்ஷர்கள் அதிகாரத்தில் இருந்தபோது அவர்களின் முழுமையான அனுசரணையுடன் முறைகேடான வழிகளில் சொத்துக்களைக் குவித்த அரசியல்வாதிகளும் கோர்ப்பரேட் முதலாளிகளுமே அவர்கள். தாங்களும் தங்களைச் சார்ந்தவர்களும் பொதுச்சொத்துக்களை வாரிச்சுருட்டுவதற்கு வசதியாக ராஜபக்ஷர் கள் கடைப்பிடித்த 'புரவுக் கலாசாரம்' (Patronage Culture) இத்தகைய பழிபாவத்துக்கு அஞ்சாத கும்பல்களை உருவாக்கியிருக்கிறது என்று முன்னரும் ஒரு தடவை இந்தப் பத்தியில் எழுதப்பட்டது. இந்தக் கும்பல்களின் விசுவாசம் ராஜபக்ஷ குடும்பத்தின் உறுப்பினர்களிடையே பரவலாக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒரு பகுதி கோட்டபாயவுக்கும் சேரும். ஜனாதிபதித் தேர்தல் நெருங்க நெருங்க கோட்டபாய நெடுகவும் மௌனம் சாதிக்க முடியாமல் போகும் என்பது நிச்சயம். தனது இரண்டில் ஒரு நிலைப்பாட்டை அவர் பகிரங்கமாகக் கூறவேண்டியிருக்கும். இவ்வாறாக எமது முன்னாள் ஜனாதிபதிகளின் அரசியல் பற்றி நாம் பேசும்போது இன்னொரு முக்கிய விடயத்தை அவதானிக்கவும் தவறக்கூடாது.

இவர்கள் எல்லோரும் தொடர்ந்தும் கோடிக்கணக்கில் மக்களின் பணத்தில்தான் பராமரிக்கப்படுகிறார்கள். ஓய்வூதியம், பாதுகாப்புடன் கூடிய சிறப்பு வசதிகளை அனுபவிக்கிறார்கள். இவர்களில் எவருமே தங்கள் சொத்தில் வசதியாக வாழ முடியாதவர்கள் அல்ல. பொருளாதார மீட்சிக்கு தவிர்க்கமுடியாதவை என்று கூறிக்கொண்டு மக்களினால் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு சேவைகளுக்கான கட்டணங்களையும் பல்வேறு வரிகளையும் அதிகரித்து பொருளாதார மறுசீரமைப்பின் சுமையின் பெரும்பகுதியை நாட்டு மக்கள் மீது சுமத்தும் ஜனாதிபதி விக்கிரமசிங்கவும் அரசாங்கமும் ஓய்வுபெற்ற பிறகு மீண்டும் அரசியலுக்கு வராமல் இருந்தால் மாத்திரமே முன்னாள் ஜனாதிபதிகளை அரசாங்கம் பராமரிக்கும் என்று ஒரு புதிய நடைமுறையையாவது குறைந்தபட்சம் கொண்டுவந்தால் என்ன? மஹிந்தவும் சிறிசேனவும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு இருக்கும் வசதி வாய்ப்புகளுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமைகளையும் அல்லவா அனுபவிக்கிறார்கள்.

வீரகத்தி தனபாலசிங்கம்



07ஆம் பக்கத் தொடர்ச்சி...

இலங்கையில் நடைபெற்றது இன அழிப்பு என்ற கருத்தை முன்வைக்கத்தவறிய நவநீதம்பிள்ளை போன்றோரின் கருத்தை மாற்றுவதற்கு தற்போதாவது ஈழத்தமிழர் தரப்பு ஏதேனும் காத்திரமான முயற்சியை மேற்கொண்டுள்ளதா என்றால் இல்லை என்ற பதிலே கிடைக்கிறது.

இவ்வாறான பாரிய தவறுகளை ஈழத்தமிழர் தரப்பு, குறிப்பாக தமிழ்த்தேசிய அரசியலில் ஈடுபடும் கட்சிகளும் புலம்பெயர் அமைப்புகளின் பிரதிநிதிகளும் ஒரு புறம் இழைத்துக்கொண்டிருக்க, மறுபுறம் உலகத் தமிழர் பேரவை என்ற தனிநபர் குழுக்கள் இதே தென்னாபிரிக்காவுடன் சிங்கப்பூர் தீர்மானத்தில் இருந்து இமாலயத் தீர்மானம் வரை தவறான அரசியலை முன்னெடுத்துள்ளன.

உலக ஒழுங்கில் வேறுபட்ட நலன்களைக் கொண்டிருக்கக் கூடிய ஐரோப்பிய நாடுகள் மட்டுமல்ல அமெரிக்காவும் இதே தென்னாபிரிக்க மாதிரியையே அதுவும் மிகவும் தவறாகத் தமிழர்களுக்கு முன்வைத்துவருகின்றன.

அண்மையில் மேற்கு நாடுகளின் தூதரகங்கள் இமாலயத் தீர்மானத்தையும் அதைத் தொடர்ந்த சந்திப்புகளையும் வரவேற்றுக் கருத்து வெளியிட்டமை இதை எடுத்துக்காட்டுகிறது. இந்த நிலை மாறவேண்டுமானால், தென்னாபிரிக்காவில் சில அடிப்படை மாற்றங்களை ஈழத்தமிழர்களின் தரப்புகள் இனியாவது சாதிக்கவேண்டும்.

மிகப் பெரிய தவறுகள் நடக்கும் போது மட்டும் அவற்றை விமர்சித்துவிட்டு மேற்கொள்ளவேண்டிய ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறும் தமிழர் அரசியற் கட்சித் தரப்புகளும் இமாலயத் தவறுகளையே புரிந்து கொண்டிருக்கின்றன.

விளைவாக, இலங்கை ஒற்றையாட்சி அரசின் தேர்தல் அரசியற் சகதிக்குள் மட்டுமே தமிழ் மக்கள் தவிக்கவிடப்பட்டுள்ளார்கள்.

மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஒரு துருவ உலக ஒழுங்கின் எதிர்ப்பாளன் என்ற கோணத்தில் மாத்திரம் சிறில் ரமபோச வழக்குத் தாக்கல் செய்திருக்கிறார் என்று கருதாமல் இன அழிப்பு எங்கு நடந்தாலும் அதனை எந்த ஒரு அரசும் கவனத்தில் எடுக்க முடியும் என்பதற்கும் சர்வதேச நீதிமன்றம் ஒன்றில் ஒரு அரசுக்கு எதிராக மற்றொரு அரசு வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

இதற்குச் சிறில் ரமபோசவின் தென்னாபிரிக்கா தற்போதைய புவிசார் அரசியல் போட்டிச் சூழலில் மேற்கொண்டுள்ள இஸ்ரேல் மீதான வழக்குத் தாக்கல் நகர்வு ஈழத்தமிழர்களுக்குத் தேவையான சர்வதேச நீதிக்கான சட்டகத்தைப் பலப்படுத்துகின்றது என்பதை ஈழத்தமிழர்கள் இங்கு உற்று நோக்கவேண்டும்.

தமிழ் இன அழிப்பு நடைபெற்றுள்ளது என்று *2013* இல் தமிழ்நாட்டு அரசு சட்டசபையில் பிரேரணை ஒன்றை நிறைவேற்றியிருந்தது. அப்போது முதலமைச்சராக இருந்த அமரர் செல்வி ஜெயலலிதா பிரேரணையை நிறைவேற்றியிருந்தார். எதிர்கட்சியாக இருந்த திமுகவும் ஆதரவு வழங்கியிருந்தது.

தற்போது தமிழ் நாட்டில் ஸ்ராலின் தலைமையிலான திமுக ஆட்சியும் ஜெயலலிதா அம்மையார் மேற்கொண்ட துணிகரமான நடவடிக்கைக்கு ஒப்பான, அல்லது அதையும் விஞ்சிய ஒரு நிலைக்குச் செல்லாமல், தேர்தல் வாக்குறுதிகளில் கூட நலிந்துபோகும் நிலையில் ஈழத்தமிழர் தொடர்பான தமிழ்நாட்டின் சர்வேதச முக்கியத்துவத்தை முடக்கிவைத்துள்ளது ஆழ்ந்த கவலைக்குரியது.

தமிழ்நாட்டின் முனைப்பு ஜெயலலிதா அம்மையார் நிறைவேற்றிய தீர்மானத்தின் பாதையில் இருந்துவிடக்கூடாது என்பதற்காக இலங்கையின் பழுத்த இராஜதந்திரியான மிலிந்த மொறகொட போன்றவர்கள் திரைமறைவில் செயற்பட்டு வருகிறார்கள். இதிலே நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதர் எரிக் சொல்கெயுமும் பங்களித்து வருகிறார் என்று பரவலாகக் கருதப்படுகிறது.

இவ்வாறான சூழலில் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த முன்னாள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை உள்ளிட்ட தென்னாபிரிக்காவில் உள்ள ஈழத்தமிழ் ஆதரவாளர்களை ஈழத்தமிழர் தரப்பு முறையாக அணுகி இலங்கையில் நடைபெற்ற இன அழிப்பு தொடர்பான விடயங்களைப் பேசுவதற்குரிய சூழலை இனியாவது உருவாக்கவேண்டும்.

இன அழிப்பை ஒத்துக்கொள்ளாமலும் அதற்குரிய அங்கீகாரத்துடன் நீதி வழங்கப்படாமலும் நல்லிணக்கம் சாத்தியமில்லை என்ற கருத்தியல் ஆழமாகப் பேசப்படவேண்டும். ஈழத்தமிழர்களுக்கு என்று ஒரு வெளியுறவுக் கொள்கை வகுக்கப்படவேண்டும் என்று பேசிக் கொண்டிருக்கும் தமிழ் ஆய்வாளர்கள் சிலர் இந்த விடயம் தொடர்பாக மேலும் ஆராய்ந்து தென்னாபிரிக்க அரசை எவ்வாறு அணுகுவது என்பது தொடர்பான விபரங்களைப் பகிரங்கமாகப் பேச வேண்டும்.

*2009* இல் முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் நடந்த அதே இன அழிப்புப் போர்தான் இன்று காசாவிலும் நடக்கிறது. ஆகவே துணிவோடு செயலில் இறங்க வேண்டும் என்பதை தென்னாபிரிக்கா, இஸ்ரேல் அரசுக்கு எதிராகச் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதை வலுவான முன்னுதாரணமாக எடுக்க வேண்டும்.

மியன்மாரில் ரோஹின்யா முஸ்லிம்களுக்கு எதிராக நடந்து கொண்டிருப்பது இன அழிப்புத்தான் என்று சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெறுகின்றது. ஆபிரிக்க நாடு ஒன்றுதான் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருக்கிறது. இதை மியன்மார் அரசு கடுமையாக எதிர்த்திருந்தாலும் அந்த வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

ஆகவே சர்வதேச நீதிமன்றத்தில் ஓர் அரசு இன்னோர் அரசுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என்ற விதிகளுக்கு அமைவாக தற்போது ஈழத்தமிழர் விடயத்தில் சாதகமான போக்கை வெளிப்படுத்தும் கனடிய அரசுக்கு அங்குள்ள புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மேலும் பல வியூகங்களை வகுத்து ஈழத்தமிழர்களுக்கு நடந்தது இன அழிப்பு என்பதை கனடிய அரசின் வெளியுறவுக் கொள்கையில் சேர்ப்பதற்குரிய அரசியல் நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும்.

சர்வதேச நீதிமன்று என்பது வேறு, சர்வதேசக் குற்றவியல் நீதிமன்று என்பது வேறு. சர்வதேச நீதிமன்றில் இன அழிப்புத் தொடர்பான அரச பொறுப்பு விசாரிக்கப்படும். ஆனால், குற்றவியல் நீதிமன்றில் தனிமனிதர்களின் குற்றப்பொறுப்பு மட்டுமே விசாரிக்கப்படும்.

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் பிடிவிறாந்து இருப்பதால் கடந்த ஒகஸ்ட் மாதம் தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற பிறிக்ஸ் மாநாட்டில் ரசிய ஜனாதிபதி விளாடிமீர் புட்டின் பங்குபற்ற முடியாதென அமெரிக்கா போன்ற மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் கடுமையாகக் கண்டித்திருந்தன. ஆனாலும் புட்டினை மாநாட்டில் பங்குபற்ற தென்னாபிரிக்கா வருமாறு அழைப்பேன் என்று ஜனாதிபதி சிறில் ரமபோச சவால் விடுத்திருந்தார்.

இருந்தாலும் சர்வதேசத்தின் கடும் அழுத்தங்களினால் இறுதியில் ரசிய ஜனாதிபதிக்குப் பதிலாக வெளியுறவு அமைச்சர் லவ்ரோவ் பிறிக்ஸ் மாநாட்டில் கலந்துகொண்டார்.

உக்ரெயன் அரசுக்கு எதிரான போர்ச்சூழலில் சிறுவர்கள் வலிந்து இடமாற்றப்பட்டதாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டை ஒருபக்கச் சார்பாகக் கையாண்டு புட்டினுக்கு எதிராகச் சர்வதேச நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது. சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தை ஏற்றுக்கொள்ளும் சர்வதேச உடன்படிக்கையில், ரசியா கைச்சாத்திடவில்லை. ஆனால் உக்ரெயன் கைச்சாத்திட்டுள்ளது. குற்றவியல் நீதிமன்றத்தின் பிடிவிறாந்திற்கு ஏற்ப புட்டின் அந்த நீதிமன்றத்தை ஏற்றுக்கொண்டுள்ள எந்த ஒரு நாட்டுக்கும் பயணிக்க இயலாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றின் பிடிவிறாந்து அரசியலுக்கு எதிரான ஒரு சர்வதேச நகர்வை ரமபோசாவின் தென்னாபிரிக்க அரசு சர்வதேச நீதிமன்றின் ஊடான நகர்வுக்கு எதிராகப் பயன்படுத்தியுள்ளதுஎன்பதுமாறிவரும் உலக ஒழுங்கு ஏற்படுத்தியுள்ள வாய்ப்புகளை எடுத்தியம்புவதாக அமைந்துள்ளது.

இனியாவது சர்வதேச நீதியையும் சர்வதேச அரசியலையும் சரியாகக் கையாள ஈழத்தமிழர்களும் தமிழ்நாடும் உலகளாவிய தமிழர்களும் காத்திரமான நகர்வுகளை முன்னெடுக்கவேண்டும். பழைய கருத்தியலில் பயணிக்கும் கருத்துருவாக்கிகளும் புதிய அறிவைப் பெற்றுக்கொண்டு இதற்குப் பங்களிக்கவேண்டும். அமெரிக்காவுக்குப் பின்னாலும், இந்தியாவுக்குப் பின்னாலும், தனித் தனியாகவும் கூட்டாகவும் செல்லப்பிள்ளை அரசியல் மேற்கொள்வதை விடுத்து தற்சார்பு நிலையில் ஈழத்தமிழர் நகர்வுகள் இனியாவது அமையவேண்டும்.

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



06ஆம் பக்கத் தொடர்ச்சி...

அடுத்து பணிப்பாளர் நாயகத்தின் அதிகாரங்களை பார்ப்போம், இது மிக மிக முக்கியமானது. ஏனென்றால் தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவி என்பது ஒரு மிகவும் அதிகாரமிக்க பதவியாக காணப்படுகின்றது. தேசிய தொல்லியல் கொள்கையை உருவாக்கி கொள்வதற்கான பொறுப்பை அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு, அதை உருவாக்கி அதை அமுல்படுத்துகின்ற பொறுப்பு பணிப்பாளர் நாயகத்தினுடையது.

இரண்டாவது தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பாரம்பரியமான பிரதேசங்கள் எவை என்பதை பட்டியல் இட்டு கொள்வதற்கான அதிகாரம் அவருடையது. அவற்றை பாதுகாப்பதற்கும் அவற்றை மேம்படுத்துவதற்குமான பொறுப்பு அவருடையது. அது தொடர்பான ஆய்விலே ஈடுபடுவதற்கான பொறுப்பு அதிகாரம் அவருக்கு இருக்கின்றது.

இது தொடர்பாக பொது மக்களுக்கு அறிவூட்டலை அவர் செய்யலாம். இவ்வாறான இடங்களுக்கு உள்நுழைவதற்கான கட்டணங்களை விதிக்கலாம். அபிவிருத்திகள் செய்யும் போது அதனால் தொல்லியலிற்கு ஏற்படக் கூடிய பாதிப்பு என்ன என்பது தொடர்பில் ஆராய்ந்து அது தொடர்பில் அரசாங்கத்திற்கும் உரிய தரப்பினருக்கும் ஆலோசனை வழங்குகின்றபொறுப்பும்பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இங்கு ஒன்றை கவனிக்க வேண்டும். தொல்லியல் என்கின்ற விடயம் 13 ஆவது திருத்தத்திலே சொல்லப்படுகின்ற 9 ஆவது பிரிவிலே மத்திய அரசாங்கத்திற்கு உரிய பொறுப்பாக இருக்கிறது. ஆகவே (archaeological policy) நிறைவேற்றுவதற்கான பொறுப்பும் மத்திய அரசாங்கத்திற்கு உரியது அல்லது மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்படுகின்ற தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் மாத்திரம் இருக்கக் கூடிய விடயமாக உள்ளது.

அடுத்து 43ஆவது பிரிவு என்னைப் பொறுத்தவரையில் ஒரு விசித்திரமான பிரிவு. 1998 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட இந்த பிரிவு தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமானவர் தனது அதிகாரங்களை யார் யாருக்கு பகிர்ந்தளிக்கலாம் என்பது தொடர்பாக சொல்கின்றது. பணிப்பாளர் நாயகம் பொதுவாகவும் சிறப்பாகவும் தனது அதிகாரங்களை யார் யாருக்கு பகிர்ந்தளிக்கலாம் என்று பார்த்தால், ஒருவர் மாவட்ட செயலாளர்.

அதாவது, தொல்லியல் திணைக்களத்திற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு அலுவலகம் அமைக்க முடியாதவிடத்து அந்த மாவட்டத்தினது மாவட்ட செயலாளர் அதாவது அரச அதிபருக்கு அதிகாரங்களை வழங்கலாம். அல்லது தனது அதிகாரங்களை பிரயோகிக்குமாறு தனது திணைக்களத்தை சேர்ந்த அதிகாரிக்கு வழங்கலாம். அதிலும் பிரச்சனை இல்லை. அல்லது அரசாங்க அதிபரின் கீழ் மாவட்ட செயலாளரின் கீழ் செயற்படக்கூடிய பிரதேசசெயலாளருக்குவழங்கலாம். அதிலும் பிரச்சனை இல்லை.

ஆனால் பிரச்சனைக்கு உரிய ஒரு பிரிவு இருக்கின்றது. 43:1ஊ அதன் கீழ் அதாவது அகழாய்வு, பேணுகை, மீள் பேணுகை, பராமரிப்பு போன்ற விடயங்களை செய்யக் கூடிய வளங்களும் விசேட நிபுணத்துவமும் உள்ள எந்தவொரு நபருக்கும் அவர் தனது அதிகாரத்தை வழங்கலாம். தற்பொழுது நீங்கள் செய்திகளிலே கேள்விப்பட்டிருப்பீர்கள்.

முல்லைத்தீவிலே இருக்க கூடிய குருந்தூர் மலை விகாரை தொடர்பாக வணக்கத்திற்குரிய கல்கமுவே சந்தபோதி தேரோ என்பவர் தற்பொழுது இராஜினாமா செய்துள்ள முல்லைத்தீவு நீதவான் அவர்களை முதலாம் எதிர் மனுதாரராக காட்டி CA 474 2023 என்ற வழக்கை 14.08.2023 அன்று தாக்கல் செய்திருக்கிறார். அதிலே அவர் இந்த பிரிவை சொல்லாமல் தான் குருந்தூர் மலை விவகாரத்திலே கவனம்செலுத்துவதற்கான காரணம் தொல்லியல் திணைக்களத்திற்கு போதுமானளவு வளங்களும் ஆளணியும் இல்லாததால் தான் என்று சொல்கிறார். குறித்த வழக்கிலே பிரிவு 43:1ஊ யின் கீழ் பணிப்பாளர் நாயகத்தால் தனக்கு அந்த அதிகாரம் உண்மையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதை குறித்த வணக்கத்திற்குரிய பிக்கு வழக்கிலே குறிப்பிடாவிட்டாலும் அவ்வாறான அதிகாரம் வழங்கப்பட கூடியதாக இருக்கின்றது என்பதே சர்ச்சைக்குரிய விடயமாக இருக்கிறது என்பது தான் எனது நிலைப்பாடு.

அரச உத்தியோகத்தர் அல்லாத ஒரு நபரிடம் பணிப்பாளர் நாயகம் தனது அதிகாரங்களை வழங்ககூடியவாறு ஏன் சட்டம் பிரிவு 43:1ஊ யின் கீழ் ஏற்பாடு செய்து வைத்திருக்கிறது? இது தொல்லியல் திணைக்களத்தின் வேலையிலே அரசியல் கலப்படம் உருவாகுவதற்கான இடத்தினை வழங்குகின்றது என்று நான் கருதுகின்றேன். இருப்பினும் ஒரு வழக்கை குறிப்பிட்டு இதனை முடிக்கலாம் என்று நினைக்கின்றேன்.

அண்மையில் தீர்க்கப்பட்ட 07.10.2022 Helagama vs ministry of buddhasasana CA 225/2022 என்ற வழக்கு ஒரு தனி நபர் தமது பிரதேசத்தில் உள்ள ஒரு தொல்லியல் பிரதேசத்தை தொல்லியல் சின்னங்களை தொல்லியல் திணைக்களம் பராமரிக்க தவறியுள்ளது.

ஆகவே தன்னிடம் அதனை கையளிக்க வேண்டுமென கூறி தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கிலே மாண்புமிகு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சோபித ராஜகருணா அவர்கள் இந்த மனிதர் ஏன் தனது செலவில் இதனை பாதுகாக்கிறேன் என்று ஆராய்கிறார். அந்த நபரின் உண்மையான நலன் என்ன என்பதனை ஆராய்ந்து பார்த்த பொழுது, அவர் அந்த தொல்லியல் பிரதேசத்திற்கு பக்கத்திலே விவசாயம் செய்து வருகின்ற ஒரு நபராக காணப்படுகின்றார்.

ஆகவே அந்த காணியோடு சேர்த்து இந்த காணியையும் சேர்த்து ஆள வேண்டும் என்பதற்காகவே அவர் அந்த பிரதேசத்தை தன்னிடம் பொறுப்பு கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார் என்பதை நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. எந்தவொரு தனி நபருக்கும் தொல்லியல் திணைக்களத்திற்கு உரிய இடத்தை கொடுத்து விட முடியாது என அந்த தீர்ப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது.

இது என்னைப் பொறுத்த வரையில் முக்கியமானது. இந்த தீர்ப்பிலே 43:1ஊ ஐ பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. அதாவது பணிப்பாளர் நாயகம் விசேடமாக எந்தவொரு நபருக்கும் தனது அதிகாரத்தை குறித்தொதுக்கலாம் என்று சொல்கின்ற விடயம் சொல்லப்படாவிட்டாலும் தீர்ப்பிலே தனி நபர் ஒருவருக்கு தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை பராமரிப்பதற்கு உரிய அனுமதி வழங்கப்பட முடியாது என்பது சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த தீர்ப்பு பொதுவாக அமுல்படுத்தப்பட்டால் மதத்தின் பெயரால் ஏற்படக்கூடிய தொல்லியல் சின்னங்களுக்கு அரசியல் சாயம் பூசுகின்ற ஒரு செயற்பாட்டை தடுத்து நிறுத்தலாம் என நான் நினைக்கிறேன்.

ஆகவே சட்டத்திற்கு உட்பட்டே தொல்லியலுக்குள் அரசியல் புகுவதற்கான இடைவெளியை சட்டமே செய்து கொடுக்கின்றது. 200 வருடத்திற்கு உட்பட்ட கட்டிடங்களை கூட தொன்மையான கட்டிடங்கள் என்று அறிவிக்கக்கூடிய அமைச்சருக்கு இருக்கின்ற அதிகாரம். தங்களால் பல நூற்றாண்டுகள் பழமையானது என்று சொல்லப்படுகின்ற குருந்தூர் மலை விகாரை போன்ற இடங்களை கூட இந்த 200 வருடங்களுக்கு உட்பட்ட பிரிவு 16 இன் கீழ் தற்துணிவு அதிகாரங்களை கொண்டு தொன்மையான சின்னங்கள் என்று அறிவிக்கின்ற பாங்கு. மற்றும் பிரிவு 43.1ஊ இன் கீழ் பணிப்பாளர் நாயகம் ஏதேனும் ஒரு நபர் ஒருவருக்கு தனது அதிகாரங்களை பாரமளிக்க கூடிய வகையில் செயற்படலாம் என்பவற்றின் ஊடாக தொல்லியல் சட்டமே தொல்லியல் விடயங்கள் அரசியல் மயப்படுவதற்கான இடைவெளியை வழங்குகின்றது.

இந்த சட்டத்தை அதனூடாக கிடைக்கும் அதிகாரங்களை பொது நம்பிக்கையாக வைத்து செயற்படுத்தல் என்ற விடயத்தை வைத்து பார்க்கின்றபொழுது தொல்லியல் சின்னங்களை பொது நோக்கத்துக்காக அதாவது அனைத்து மக்களையும் உள்வாங்குகின்ற நோக்கத்திற்காக செயல்படுத்துகின்ற விதத்திலே சட்ட ரீதியாக போராடுவதற்கான இடைவெளி இருக்கிறது.

வெற்றி தோல்வி மறுபுறம். ஆனால் அரசியல் மயப்படுத்தப்பட்ட இந்த சட்டத்தையும் நாங்கள் வினைத்திறனாக முழுமையாக விளங்கி முழுமையான பார்வையின் அடிப்படையில் நாங்கள் சிந்தித்து செயற்படும் போது எம்மிடமிருந்து பறிக்கப்படுகின்ற எமது வரலாற்றை ஓரளவுக்காவது நாம் எம்மகத்தே வைத்திருப்பதற்கான முயற்சியில் ஈடுபடலாம் என நான் கருதுகின்றேன். முயற்சி திருவினையாக்கும்.

## பாகிஸ்தான் பொது தேர்தல் ஒத்திவைப்பு

பாகிஸ்தான் நாட்டில் பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி பொது தேர்தல் நடத்துவதற்கு அந்நாட்டு தேர்தல் ஆணையம் முடிவு செய்தது.

இதுதொடர்பாக ஏராளமான பிரச்சினைகள் ஏற்பட்ட நிலையில், பாகிஸ்தான் உச்சநீதிமன்றம் அறிவிக்கப்பட்ட திகதியில் தேர்தலை நடத்தி முடிக்க அந்நாட்டு தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட்டு இருந்தது.

இந்த நிலையில், பாகிஸ்தானில் அடுத்த மாதம் நடைபெற இருந்த பாராளுமன்ற தேர்தல் ஒத்திவைக்கப்படுகிறது. இதற்கான தீர்மானம் அந்நாட்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு உள்ளது. பாராளுமன்ற தேர்தலை ஒத்திவைக்க கோரும் தீர்மானத்திற்கு பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிஃப், பாகிஸ்தான் தகவல் தொடர்பு துறை மந்திரி முர்தாசா சோலங்கி எதிர்ப்பு தெரிவித்தனர்.

தீர்மானத்தின் படி பாகிஸ்தானின் பெரும்பாலான பகுதிகளில் கடுமையான குளிர்காலம் நிலவுவதால், மக்கள் வாக்களிக்க அதிக எண்ணிக்கையில் வர முடியாத சூழல் ஏற்படலாம் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. திட்டமிட்டப்படி பாராளுமன்ற தேர்தலை நடத்தி முடிக்க அந்நாட்டு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில், தேர்தலை ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருப்பது அந்நாட்டு அரசியலில் பரபரப்பான சூழலை உருவாக்கியுள்ளது.

## இந்தியாவை பின்னுக்குத் தள்ளிய அவுஸ்திரேலியா

சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான அணிகள் தரவரிசை பட்டியலை ஐசிசி வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் இந்திய அணியைப் பின்னுக்கு தள்ளி அவுஸ்திரேலியா முதலிடத்தைப் பிடித்துள்ளது.

கேப்டவுனில் தென் ஆபிரிக்காவுக்கு எதிராக 4 ஆம் திகதி நடைபெற்ற 2 ஆவது டெஸ்ட் போட்டியில் இந்தியா வென்று, தொடரை 1-1 என சமன் செய்தது.

இதனால் புள்ளிப்பட்டியலில் அவுஸ்திரேலிய அணி இந்திய அணியை விட 1 ரேட்டிங் புள்ளிகள் கூடுதலாக பெற்று முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இந்திய அணி 117 ரேட்டிங் உடன் 2 ஆவது இடத்தில் உள்ளது. தென் ஆபிரிக்க அணி 4 ஆவது இடத்தில் நீடிக்கிறது.

நியூசிலாந்து, பாகிஸ்தான், இலங்கை மற்றும் மேற்கிந்திய அணிகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.



# "மலையக" தேசிய அடையாளத்தின் - பரிணாமங்களும், பரிமாணங்களும்

கடந்தவாரத் தொடர்ச்சி...

அக்கருத்தை அரசியல் களத்துக்கு முதலில் இழுத்துக்கொண்டு வந்த போதும் வந்த வேகத்தில் அவர்கள் மலையகம் பற்றிய உறுதியான நிலைப்பாடுகளில் இருந்து செயலிழந்து போனார்கள். அக்கட்சி வேகமாக பலவீனமானது போலவே அவர்களின் எழுச்சிகர கருத்துக்களும் காற்றோடு கரைந்தது. நாங்கள் நம்பியது போலவே அன்று பேராசிரியர் சிவத்தம்பியும் அக்கருத்துக்களின் செல்வாக்குக்கு ஆட்பட்டார் என்றே கொள்ள வேண்டும். அக்கருத்து இன்றுபோல அன்றும் ஒரு விவாதப் பொருளாக ஆகியிருந்தால் அந்த விவாதத்தில் பேராசிரியர் சிவத்தம்பி வேறு நிலைப்பாட்டையும் எடுத்திருக்கக் கூடும்.

அதற்கு ஒரு உதாரணத்தையும் இங்கே குறிப்பிடவேண்டும். அதே 90களின் நடுப்பகுதியில் அருந்ததியன் என்கிற புனைபெயரில் "தலித்தின் குறிப்புகள்" என்கிற தலைப்பில் சரிநிகர் பத்திரிகையில் ஒரு தொடர் பத்தியை எழுதத் தொடங்கினேன். தொடங்கியபோது "தலித்" என்கிற பதம் இலங்கைக்கு அவசியமா என்கிற கருத்தை என்னிடம் முன்வைத்தார். எனது தரப்பு விளக்கத்தையும் அவரிடம் முன்வைத்தேன். ஆனால் அடுத்தடுத்து வந்த அப்பத்தியின் தொடரை வாசித்த அவர், அப்பதத்தின் இலங்கைப் பயன்பாட்டில் தவறில்லை என்று ஏற்றுக்கொண்டார். இவ்வாறு உரிய தர்க்கம் கிடைத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய மதிப்புமிக்க புலமையாளர் அவர். அவர் "சுட்டும் மரபு இன்று வழக்கிலுள்ளது" என்பதை அன்று வெளியில் உள்ள கருத்தாடலை வைத்துத் தான் முன்வைத்தார். அது மட்டுமல்ல, திலகராஜா வசதியாக அதே நூலில் மேற்படி பந்திக்கு அடுத்தபந்தியை ஏன் மறைத்தார், இருட்டடிப்பு செய்தார் என்கிற கேள்வியை இங்கே எழுப்ப விரும்புகிறேன். பேராசிரியர் அடுத்ததாக என்ன பதிவு செய்தார் என்பதை இதோ பாருங்கள்.

"மலையகத் தமிழர் என்ற இத்தொடர்," பொதுப்படையாக, பெருந் தோட்டங்களில் இந்திய வம்சாவளித் தமிழர்கள் யாவரையும் குறிப்பிடுகின்ற தெனினும், சற்றுக் கூர்ந்து நோக்கும் பொழுது, அது உண்மையிற் பெருந்தோட்ட உற்பத்தி முறையோடிணைந்துள்ள மூன்று முக்கிய "குழுவினரை" ஒருங்கு இணைத்துள்ள ஒரு பதமென்பது தெரியவரும். பெருந்தோட்டங்களில் வேலை பார்க்கும் தொழிலாளிகளான இந்திய வம்சாவளித் தமிழர்கள் (கங்காணிளும் தொழிலாளர்களும்), பெருந்தோட்டங்களில் நிர்வாக அலுவலகங்களில் உத்தியோகத் தர்களாகக் கடமையாற்றும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் (இவர்களுள் ஆசிரியர்களையும் சேர்த்துக் கொள்வர்), பெருந் தோட்டங்களைச் சார்ந்த நகரங்களிலும் வணிக முயற்சி களிலீடுபட்டுள்ள இந்திய வம்சாவளித் தமிழர்கள், ஆகியோரே அந்த மூன்று குழுவினருமாவர். ஆக அவர் "மலையகத் தமிழர்" என்று பெருந்தோட்ட இந்திய வம்சவளியினரையே இங்கே வரையறுக்கிறார் என்பதை இங்கே கவனிக்க வேண்டும்.

2. அடுத்ததாக திலகராஜா சாரல் நாடனை ஆதாரத்துக்கு அழைக்கிறார்.

"மலையகம் என்ற சொல் இன்று பரந்துபட்ட அர்த்தத்தில் வழக்கில் இருக்கிறது. இலங்கை வாழ் இந்திய வம்சாவழித் தமிழரை இலங்கையின் எந்தப் பகுதியில் வாழ்ந்து வந்தாலும் மலையகத் தமிழர் என்று குறிப்பிடும் வழக்கம் இன்று ஏற்பட்டுள்ளது. பூகோள எல்லைகளை மீறிய விதத்தில் உணர்வுபூர்வமாக ஒரு சமுதாய மக்களை இனம் காட்டும் முறையே இது". திலகராஜ் "எனவே "மலையகம்" என்பது புவியியல் எல்லைகளைக் கடந்த ஓர் இனக்குழுமத்தின் "உணர்வு" என்பதாகப் புரிந்துகொள்வதே அவசியமானதாகும்." என அக்கருத்தை சாராம்சப்படுத்துகிறார்.

இங்கே "ஓர் இனக்குழுமத்தின் உணர்வு" என்று சொல்லும் போது ஏன் அந்த இனக்குழுமத்துக்குள் மலையகத்துக்கு வெளியில் உள்ளவர்களின் உணர்வையும் சேர்க்கவில்லை என்பதே இங்கே எழும் கேள்வி. மலையகத்தில் "மலையகம்" என்கிற அந்த உணர்வு வளர்த்தெடுக்கப்பட்டபோதும், அதற்கு வெளியில் உள்ளவர்களின் உணர்வும் கருத்தும் இதுதானா? இல்லை என்பதை அடித்துச் சொல்லலாம். முடிந்தால் ஒரு கருத்துக் கணிப்பை மலையகத்துக்கு வெளியில் எடுத்துப் பார்க்கட்டும் என்றே கூற வேண்டியிருக்கிறது. மேலும் ஒரு ஆழமான கருத்துருவாக்க விவாதத்துக்கு இப்படி தனிநபர்களின் "மேற்கோள்களை" விட களத்தில் உள்ள மக்களின் கருத்துக்களும் உணர்வுகளும், அவர்களின் நியாயங்களும், தர்க்கங்களுக்குமே அதிக வலுவுள்ளது என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

## தொண்டமான் பரிந்துரைத்த கண்டி அடையாளம்:

1948 குடியுரிமை சட்ட விவாதத்தின் போது தொண்டமான் ஒரு பரிந்துரையை வைத்தார். இனி இந்தியத் தொழிலாளர்கள் என்பதற்குப் பதிலாக "கண்டித் தமிழர்கள்" என்று அழையுங்கள் என்றார். கண்டியில் தான் தேயிலை பயிர்ச்செய்கை முதற் தடவையாக தொடங்கப்பட்டது. அங்கே தான் தேயிலையை மையப்படுத்திய தொழிலாளர்களின் குடியேற்றமும், குடியிருப்புகளும் ஆரம்பமாகின. கண்டிச் சீமைக்குப் போகிறோம் என்று பொதுவாக தமிழகத்தில் அப்போதைய தொழிலாளர்கள் கூறுவார்கள். வாய்மொழிப் பாடல்களும், இலக்கியங்களும் கூட கண்டியையே தோட்டத் தொழிலாளர்களின் குறியீட்டு மையமாகப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். ஒரு காலத்தில் கண்டி என்பது தோட்டத்தொழிலாளர்களின் மையமாகவும் குறியீடாகவும் இருந்தது உண்மை. மலையகத்துக்கு வெளியே இந்திய வம்சாவளியினரின் வாழ்விடமாக பொதுத்தளத்தில் "பொதுப்புத்தியில்" அறியப்பட்ட இடமும் கண்டி தான். எனவே தொண்டமான் "கண்டித் தமிழர்கள்" என்று அடையாளப்படுத்த முயன்றதை இந்த அர்த்தத்தில் புரிந்துகொள்ள முடியும்.

இன்று "மலையகத் தமிழர்", இந்திய வம்சாவழித் தமிழர்", இந்தியத் தமிழர், "இலங்கை வாழ் இந்திய வம்சாவழித் தமிழர்" என்கிற பல நாமங்கள் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் நடக்கின்ற இந்த வேளை, அன்று "கண்டித் தமிழர்" என்கிற பதம் நிலைபெற்றிருக்குமானால் அதன் எதிர்காலம் எவ்வாறு அமைந்திருக்கும் என்று இன்று கேட்க வேண்டியிருக்கிறது. குறிப்பாக இலங்கையில் அனைத்து பகுதிகளிலும் வாழும் இந்திய வம்சாவழித் தமிழரையும் "மலையகத் தமிழர்" என்கிற நாமத்தை சூட்ட வேண்டும் என்பவர்களிடம் இந்த விடயத்தை அழுத்தி நினைவுறுத்த வேண்டியிருக்கிறது.

இலங்கையில் கண்டியச் சிங்களவர், கரையோரச் சிங்களவர் என்பது சிங்கள சமூகத்துக்குள்ளேயே உப இன அடையாளமாக இருந்தது உண்மை தான். கண்டி ராஜ்ஜியம் கடைசியாக வீழ்ந்த ராஜ்ஜியம். அதாவது சிங்கள சமூக பண்பாட்டு அம்சங்களை இறுதி வரை தக்கவைத்துக்கொண்டிருக்கும் வாய்ப்பைக் கொண்டிருந்த சமூக அமைப்பு அது. எனவே கண்டியப் பெருமிதம் என்பது "தூய" சிங்கள சமூகத்தின் பெருமிதமாக தம்மை உணர்ந்து வந்தது. 1815 ஆம் ஆண்டு கண்டி ஆங்கிலேயர்களிடம் வீழ்ந்த பின்னர் கூட தம்மை ஏனைய சிங்களவர்களிடம் இருந்து தனித்த அம்சங்களைக் கொண்ட சமூகமாக அவர்கள் தம்மை அடையாளப்படுத்தி வந்தார்கள். ஆங்கிலேயர்களும் அதனை கணக்கிற் கொண்டார்கள். எனவே தான் அரசியல் யாப்பு சீர்திருத்தங்களின் போது கண்டிப் பிரதிநிதிகள் என தனியான சமூகமாக அவர்களின் பிரதிநிதித்துவத்தைப் பேணினார்கள்.

எப்படியோ! இறுதியில் கண்டிச் சிங்களவர்களும் கரையோரச் சிங்களவர்களும் நாளடைவில் "கண்டி" என்றோ "கரையோரம்" தனியொரு பிரதேச அடையாளத்துக்குள் தங்களை சுருக்கிக் கொள்ளவில்லை. மாறாக "சிங்களவர்" என்கிற பொது இன அடையாளத்துக்குள் தான் இறுதியாக வந்து சேர்ந்தார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. ஒரு சமூகத்தின் பெயரை ஒரு புவியியல் பிரதேசத்தை அடைமொழியாகக் கொண்ட அடையாளத்தை சூட்டுவதில் பல்வேறு சமூக, பண்பாட்டு இடையூறுகள் உள்ளன. அப்படி சூட்டுவது யதார்த்தத்துக்கும், விஞ்ஞானபூர்வத்துக்கும், நடைமுறைக்கும் கொஞ்சமும் அருகில் வர முடியாத அணுகுமுறை.

## நான்கு வீதத்துக்கு குறைந்ததன் காரணிகள்

1950கள் வரை இரண்டாவது பெரும்பான்மை இனமாக இருந்தவர்கள் எப்படி நான்கு வீதமாக சுருங்கி நான்காவது இடத்துக்கு தள்ளப்பட்டு, ஒரு இனம் என்கிற அடையாளத்துக்குள் அடங்க முடியாதவர்களாக ஆக்கப்பட்டதன் பின்னணியை நாம் அறிதல் வேண்டும். அது தற்செயல் நிகழ்வல்ல. பிரஜாவுரிமை பறிபோடு வாக்குரிமையும் பறிபோய் நாடற்றவர்களாக ஆகி மீள நாடு திரும்பியவர்கள் கணிசமானோர்.

நேரு கொத்தலாவல, சிறிமா சாஸ்திரி, சிறிமா இந்திரா ஆகிய ஒப்பந்தங்களின் பேரம் பேசல்களுக்கு ஊடாக நாடு கடத்தப்பட்டவர்களும், நாடு திரும்பியவர்களும், இனக்கலவரங்களின் பாதிப்பால், உடமைகளை இழந்தும், சொந்தங்களின் உயிர்களை இழந்தும், நம்பிக்கை இழந்தும் தமிழ்நாடு திரும்பியவர்கள். இந்த நிலைமைகளின் காரணமாக இந்திய வம்சாவளி என்று பதிவு செய்யாமல் இலங்கைத் தமிழர்களாக தம்மைப் பதிவு செய்து கொண்டமை.

நாடளாவிய ரீதியில் ஏனைய சமூகங்களோடு கலந்து இந்திய வம்சாவளி என்கிற அடையாளத்தை செயற்கையாக இழந்தமை.

"இந்திய வம்சாவளி" அடையாளத்தை நீக்கிவிட்டு "இலங்கைப் பிரஜை" என பதிவு செய்துகொண்டமை.

தோட்டப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட கருத்தடைத் திட்டங்களால் உருவான" செயற்கை இனப்பெருக்க குறைப்பு.

குறைந்த வாழ்வாதார வசதிகளின் காரணமாகவும், வறுமை காரணமாகவும் தாமாகவே குடும்பக் கட்டுப்பாடுகளை செய்து கொண்டு பிறப்பு வீதத்தை மட்டுப்படுத்திக் கொண்டமை.

காலனித்துவக் காலப்பகுதியில் இலங்கையில் குடியேறிய மற்றும் குடியேற்றப்பட்ட இனங்களையும் சேர்த்து ஏறத்தாள முக்கியமாக இருபது இனங்கள் இலங்கையில் இன்று அடையாளம் காட்டப்படுகின்றன. ஆனால் குடித்தொகைக் கணக்கெடுப்பில் ஒரு இனமாக அடையாளம் காண்பதற்கு உரிய வரைவிலக்கணங்கள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்துக்கு ஊடாக (RTI) 27.10.2022 அன்று எஸ்.விஜயகுமார் கோரியிருந்த கேள்விகளுக்கு இலங்கை புள்ளிவிபரத் திணைக்களத்திற்கூடாக திரட்டி அளிக்கப்பட்ட பதில்களிலிருந்து புரிதலுக்காக இங்கே விபரங்களைத் தர வேண்டியிருக்கிறது. புதிய வரைவிலக்கணத்தின் பிரகாரம் இந்திய வம்சாவளி மக்கள் அந்தப் பிரதான பட்டியலில் இருந்து அகற்றப்படக்கூடிய ஆபத்து இருப்பதை இன்று உணர முடிகிறது. 1901ஆம் ஆண்டு வரை தாம் எந்த தேசிய இனம் (Nationality) என்பதை அறிவித்துக்கொள்ளும் உரிமை இலங்கை மக்களுக்கு இருந்தது. 1901 முதல் 1953 வரையான காலப்பகுதியில் "இனம்" (Race) எது என்பது பற்றிய விபரங்களை தனிபர்கள் சுயமாக அறிவிக்க இயலுமானதாக இருந்தது. ஆனால் 1963இலிருந்து "இனக்குழு" (Ethnic Group) என்று அடையாளப்படுத்தும் முறைமை அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

அதேவேளை 1971 ஆம் ஆண்டு புள்ளிவிபரத் தயாரிப்பின் போது இனங்களை வகைப்படுத்தும் போதும் பதிவு செய்யும்போதும் அவர்கள் கொண்டிருக்கிற சதவீதங்களைக் கருத்திற்கொண்டு பாகுபடுத்தப்பட்டனர். அதுமட்டுமன்றி அந்தத் தொகைமதிப்பின் போது தான் முதற் தடவையாக வேடர்களும், ஐரோப்பியர்களும் இனக்குழுக்கள் என்கிற அடையாளத்தை இழந்தார்கள் என RTI தெரிவிக்கிறது. அதுமட்டுமன்றி அதே 1971 தொகைமதிப்பின் பிரகாரம் புதிதாக இரு இனக்குழுக்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். "பரத" (பரதவர்), "இலங்கை செட்டிகள்" ஆகிய இரு பிரிவினரும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

1971 இல் வேடர்களும், 1963இல் ஐரோப்பியர்களும் நீக்கப்பட்டதற்கு அவர்கள் 5% வீத மக்கள் தொகையை எட்டாதது தான் காரணம் என்கின்றனர். ஆனால் இந்த வரையறைகளை சர்வதேச குடித்தொகை கணக்கெடுப்பு பரிந்துரைகளின் படியும், நியமங்களின் படியும்தான் மேற்கொண்டதாக அவர்கள் தெரிவிக்கிறார்கள். 5% வீதத்துக்கு குறைகிற இனக்குழுக்கள் தேசிய இனம் என்கிற அடையாளத்தை இழந்து வேறு இனங்கள் (Others) என்கிற அடையாளத்துக்குள் தள்ளப்பட்டுவிடுகின்றனர்.

இன்றையை இந்திய வம்சாவளித் தமிழர்கள் எதிர்கொள்ளும் உடனடி ஆபத்தான பிரச்சினை இது தான். புதிய கணக்கெடுப்புகளின்போது 5% வீதத்துக்கும் குறைவாக அவர்கள் கணிக்கப்பட்டுவிட்டால் அது அவர்கள் தனியொரு இனமாக அடையாளப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுவிடும். அது அவர்களின் தேசிய அடையாளத்தையும் இல்லாது செய்வதுடன், அவர்களின் அரசியல் அபிலாசைகளையும், அரசியல் கோரிக்கைகளையும், ஈற்றில் அரசியல் இருப்பையும் எதிர்காலத்தையும் கடுமையாக பாதிக்க வாய்ப்புண்டு.

அரசியல் ரீதியான காப்புறுதியை இழக்க நேரிடும் ஆபத்தின் விளிம்பில் மலையக மக்கள் இருப்பதால் தான் ஒட்டுமொத்த இந்திய வம்சாவளியினரையும் ஒரே இன அடையாளத்தின் கீழ் கொண்டுவருவதற்கான கோரிக்கைகள் எழுந்துள்ளன. ஆனால் அப்படியான ஒரு முயற்சி நிர்ப்பந்தத்தின் அடிப்படையிலோ, உரிய மக்களுக்கு தெரியாமலோ, அவர்களின் கண்களைக் கட்டிவிட்டோ மேற்கொள்ளப்படுதலில் உள்ள ஆபத்தை பலரும் உணருவார் இல்லை.

தொடரும்...

**- என்.சரவணன் -**

# விளையாட்டுச் செய்திகள்

## டி20 உலகக் கோப்பை 2024 : வெளியான போட்டி அட்டவணை




உலகக் கோப்பை டி20 தொடர் எதிர்வரும் (01.06.2024) ஆம் திகதி முதல் (29.06.2024) ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளதுஎன்றும், அதற்கான அணிகளின் பட்டியலையும் ஐசிசி அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் நடத்தப்படும். கடந்த 2022-ம் ஆண்டு நடைபெற்ற டி20 உலகக் கோப்பை தொடரில் இங்கிலாந்து அணி சாம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றது.

இதையடுத்து, இந்த ஆண்டிற்கான டி20 உலகக் கோப்பை தொடருக்கான அட்டவணையை ஐசிசி வெளியிட்டுள்ளது.

இந்த உலகக் கோப்பை டி20 தொடரானது வரும் ஜூன் 1-ம் திகதி தொடங்கி 29-ம் திகதி வரையில் நடைபெறவுள்ளது. இந்த உலகக்கோப்பை தொடரை அமெரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய அணிகள் இணைந்து நடத்துகின்றன.

இந்தியா, இங்கிலாந்து, இலங்கை, அவுஸ்திரேலியா, ஆப்கானிஸ்தான், அயர்லாந்து, அமெரிக்கா, வங்கதேசம், வெஸ்ட் இண்டீஸ், நேபாள், நியூசிலாந்து, நெதர்லாந்து, பாகிஸ்தான், நமீபியா, ஓமன், பப்புவா நியூ கினியா, ஸ்கொட்லாந்து, தென் ஆபிரிக்கா, உகாண்டா, கனடா என்று 20 அணிகள் இடம் பெற்று விளையாடுகின்றன.

இந்த 20 அணிகளும் குரூப் ஏ, குரூப் பி, குரூப் சி, குரூப் டி என்று 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிலும் 5 அணிகள் இடம் பெற்று விளையாடுகின்றன.

இந்தப் போட்டிகள் எதிர்வரும் (01.06.2024) ஆம் திகதி முதல் (18.06.2024)ஆம் திகதி வரையில் நடைபெறும்.

ஜூன் 26 மற்றும் 27-ம் திகதிகளில் முதல் மற்றும் 2வது அரையிறுதிப் போட்டிகள் நடத்தப்படும்.

கடைசியாக ஜூன் 29-ம் திகதி இறுதிப் போட்டி நடத்தப்படுகிறது. இந்தப் போட்டி டல்லாஸில் நடக்கிறது.

இந்திய அணி விளையாடும் 4 போட்டிகளும் அமெரிக்காவில் நடத்தப்படுகிறது.

குரூப் ஏ: இந்தியா, பாகிஸ்தான், அயர்லாந்து, கனடா, அமெரிக்கா

குரூப் பி: இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, நமீபியா, ஸ்கொட்லாந்து, ஓமன்

குரூப் சி: நியூசிலாந்து, வெஸ்ட் இண்டீஸ், ஆப்கானிஸ்தான், உகாண்டா, பப்புவா நியூ கினியா,

குரூப் டி: தென் ஆப்பிரிக்கா, வங்கதேசம், இலங்கை, நெதர்லாந்து, நேபாளம்

இந்த போட்டிகள் அனைத்தும் இந்திய நேரப்படி இரவு 8.30 மணிக்கு தொடங்குகிறது.

இதில், அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகளுக்கு ரிசர்வ் டே இருக்கிறது.

இதில், ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களைபிடிக்கும் அணிகள் சூப்பர் 8 சுற்றுக்கு முன்னேறும்.

இந்த சூப்பர் 8 சுற்றானது 2 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்படும்.

இதில், முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெறும்.

இந்த சூப்பர் 8 சுற்று போட்டிகள் ஜூன் 19ஆம் திகதி முதல் ஜூன் 24 ஆம் திகதி வரையில் நடைபெறும்.

## 100ஆவது ஆண்டில் அர்ஜென்ரீனா ஒலிம்பிக்

அர்ஜென்ரீனா ஒலிம்பிக் குழு 1924ஆம் ஆண்டு பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கான கட்டமைப்பை உருவாக்க 1923 ஆம் ஆண்டில் ஜனாதிபதி மார்செலோ டோர்குவாடோ டி அல்வேரின் ஆணையால் நிறுவப்பட்டதன் மூலம் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி அதன் நூற்றாண்டு விழாவைக் குறித்தது.

அர்ஜென்ரீனா ஒலிம்பிக் குழு அதன் 100வது ஆண்டு விழாவை கடந்த ஞாயிற்றுக்கிழமைகொண்டாடியது. இது1923 இல் மார்செலோ டி.டி.அல்வேரால் ஜனாதிபதி ஆணையால் உருவாக்கப்பட்டது.



1924 பாரிஸ் ஒலிம்பிக்கில் பங்கேற்று, ஒரு தங்கம், மூன்று வெள்ளி மற்றும் இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றது.

## சாதனையை முறியடித்த விராட் கோலி




தென் ஆபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்டில், இந்திய அணி வீரர் விராட் கோலி 7 முறை ஒரே ஆண்டில் 2000 ஓட்டங்கள் எடுத்த வீரர் என்ற சாதனையை படைத்தார்.

செஞ்சூரியனில் நடந்த டெஸ்டில் தென் ஆபிரிக்க அணி இன்னிங்ஸ் மற்றும் 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

விராட் கோலி இரண்டாம் இன்னிங்சில் 76 (82) ஓட்டங்கள் எடுத்தார். இதன்மூலம் அவர் ஒரே ஆண்டில் 7 முறை 2,000 ஓட்டங்கள் எடுத்து சாதனை படைத்தார்.

இதற்கு முன்பு இலங்கை ஜாம்பவான் குமார் சங்கக்கார 6 முறை ஒரே ஆண்டில் 2,000 ஓட்டங்கள் எடுத்திருந்தார். அவரது இந்த இமாலய சாதனையை கோலி முறியடித்துள்ளார்.

## கால்பந்து வீராங்கனைக்கு முத்தமிட்ட வழக்கு - தீவிரமடையும் விசாரணை

ஆஸ்திரேலியாவில் கடந்த 2023 ஒகஸ்ட் 20 அன்று நடைபெற்ற உலக கோப்பை பெண்கள் கால்பந்து தொடரின் இறுதி போட்டியில் ஸ்பெயின் 1-0 எனும் கோல் கணக்கில் இங்கிலாந்தை வீழ்த்தி வெற்றிபெற்றது.

உலக கிண்ணத்தை வென்ற மகிழ்ச்சியில் பரிசு பெறும் நிகழ்ச்சியில் ஸ்பெயின் வீராங்கனைகள் பங்கேற்ற போது, ஸ்பெயின் கால்பந்து விளையாட்டு சங்க தலைவர் லூயிஸ் ரூபியாலஸ் (Luis Rubiales) ஜென்னி ஹெர்மோசோ (Jenni Hermoso) எனும் வீராங்கனையை கட்டியணைத்து முத்தமிட்டுள்ளார். வீராங்கனையிடம் தகாத முறையில் நடந்து கொண்ட ரூபியாலஸின் நடவடிக்கை பெரிதும் விமர்சிக்கப்பட்டது.

இதையடுத்து, "நான்நடந்துகொண்ட விதம் தவறுதான். அதை ஒப்பு கொள்கிறேன். ஆனால் அதிகபட்ச மகிழ்ச்சியில் எந்த உள்நோக்கமும் இல்லாமல் அவ்வாறு நடந்து கொண்டேன்" என ரூபியாலஸ் தெரிவித்தார். இதனைத்தொடர்ந்து, அவருக்கு எதிராக எழுந்த கண்டனங்களால், தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். பெரும் சர்ச்சையை உண்டாக்கிய இந்நிகழ்வு தொடர்பில் ஸ்பெயின் தலைநகர் மேட்ரிட் (Madrid) நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது.

மேலும், "எனக்கு ரூபியாலஸ் நடந்து கொண்ட விதம் பிடிக்கவில்லை" என ஹெர்மோசோ அப்போது கருத்து



தெரிவித்துள்ளார். இதில் ஹெர்மோசோ, தனது கருத்துக்களை பதிவு செய்தார். சுமார் 2 மணி நேரத்திற்கும் மேல் அவரிடம் விசாரணை நடைபெற்றது. "என் சம்மதத்துடன் அந்த நிகழ்வு நடைபெறவில்லை. நான் எதிர்பாராத நேரத்தில் ரூபியாலஸ் அவ்வாறு நடந்து கொண்டார்" என ஹெர்மோசோ விசாரணையில் தெரிவித்தார்.

பரிசு வழங்கும் நிகழ்ச்சியின் போது அங்கிருந்த கண்காணிப்பு கமரா காணொளிகளை நீதிமன்றம் ஆய்வு செய்து வருகிறது. ஸ்பெயின் சட்டப்படி ஒருவரின் சம்மதமில்லாமல் அவருக்கு முத்தமிடுவது பாலியல் குற்றமாக கருதப்படும்.

எனவே, இப்போது நடைபெறும் விசாரணை முடிவில்தான் இந்த வழக்கில் ஸ்பெயின் கால்பந்து விளையாட்டு சங்க தலைவர் லூயிஸ் ரூபியாலஸ் பாலியல் குற்றம் புரிந்தவராக விசாரிக்கப்படுவாரா என தெரிய வரும்.

# உலக வலம்

## இஸ்ரேலுக்கு எதிராக 'பகிரங்க விசாரணை'

காசாவில் இஸ்ரேல் இனப்படுகொலையில் ஈடுபட்டு வருவதாக தென்னாபிரிக்கா தாக்கல் செய்த வழக்கு மீது சர்வதேச நீதிமன்றத்தில் பகிரங்க விசாரணை நடத்தப்படவுள்ளது.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் (11.01.2024) மற்றும் (12.01.2024) ஆம் திகதியில் நடைபெறும் என்று ஹேகில் உள்ள சர்வதேச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கு எதிராக தொடுக்கப்பட்ட இந்த வழக்கிற்கு துருக்கி மற்றும் மலேசிய நாடுகள் தென்னாபிரிக்காவுக்கு ஆதரவு வெளியிட்டுள்ளன.

தென்னாபிரிக்காவின் இனப்படுகொலை குற்றச்சாட்டுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தின் முன் தோன்றுவதாக இஸ்ரேல் அரசு தெரிவித்துள்ளது.



இதேநேரம் இந்த வழக்கை நிராகரித்திருக்கும் அமெரிக்கா, "தகுதியற்ற, எதிர்மறையான மற்றும் முழுமையாக எந்த ஒரு அடிப்படையும் அற்றது" என்று குறிப்பிட்டுள்ளது.

காசா மீது தொடரும் இஸ்ரேலிய தாக்குதல்களில் சிறுவர்கள் மற்றும் பெண்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட 22,000க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

## விசைப்பலகையில் மாற்றம் - மைக்ரோசொப்ட்


விசைப்பலகையில் 30 ஆண்டுகளாக எந்த ஒரு புதிய வசதியையும் அறிமுகப்படுத்திடாத மைக்ரோசொப்ட் நிறுவனம் புதிய பட்டனை அறிமுகப்படுத்தியுள்ளது.

மைக்ரோசொப்டுடன் இணைந்து செயல்படும் மடிகணினி மற்றும் கணினி உற்பத்தியாளர்கள் புதிய பட்டனை அறிமுகப்படுத்த ஒப்புக்கொண்டுள்ளனர்.

இந்த புதிய பட்டன் மைக்ரோசொப்டின் புதிய செய்யறிவு தொழில்நுட்பமான "கோபைலட்" டை பயன்படுத்துவதற்காக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இந்த பட்டன் மூலமாக கோபைலட்டை எளிதாகச் செயற்படச் செய்யலாம் எனத் தெரிவித்துள்ளனர்.

வெறும் இணையவழிச் சேவைகள் மட்டும் இல்லாமல் உள்பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில்



இந்த கோபைலட் செயல்படும் எனக் கூறப்படுகிறது.

கடைசியாக 30 வருடங்களுக்கு முன் "விண்டோஸ்" பட்டனை அறிமுகப்படுத்தியிருந்த மைக்ரோ சொப்ட் இப்போது இந்து வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.

"செய்யறிவு தொழில்நுட்ப உலகின் நுழைவுவாயிலாககோபைலட் கீ இருக்கும்" என மைக்ரோசொப்ட் நிர்வாக துணைத்தலைவர் மற்றும் நுகர்வோர் தலைமை அதிகாரியான யூசுப் மெஹ்டி தெரிவித்துள்ளார்.

## தென் கொரியா மீது திடீர் தாக்குதல்



தென்கொரியா மீது வடகொரியா 200க்கும் மேற்பட்ட பீரங்கிக் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்திய சம்பவம் உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

தென் கொரியாவுக்கு சொந்தமான யோன்பியோங் தீவு பகுதியிலேயே குறித்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்பாராத நேரத்தில் இடம்பெற்ற இத்தாக்குதலால் அப்பகுதியில் போர் பதற்றம் நிலவி வருகின்றது.

இந்நிலையில் குறித்த பகுதியில் உள்ள மக்களை உடனே வெளியேறுமாறு தென் கொரிய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

எவ்வாறு இருப்பினும் இந்த தாக்குதலால் பொதுமக்களுக்கோ அல்லது தமது இராணுவத்துக்கோ எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்றும் தென்கொரிய அரசு உறுதிப்படுத்தியுள்ளது.

## ஜோ பைடன் மீதான அதிருப்தி அதிகரிப்பு



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் காசா மோதலை கையாளும் முறைக்கு அதிருப்தி வெளியிட்டு அமெரிக்க கல்வித் திணைக்களத்தின் மூத்த அதிகாரி ஒருவர் பதவி விலகியுள்ளார்.

இந்தப் போருக்கு எதிராக அமெரிக்க நிர்வாகத்தில் அதிகரித்து வரும் அதிருப்தியின் தொடர்ச்சியாகவே இந்தப் பதவி விலகல் அமைந்துள்ளது.

இந்த விவகாரத்தால் எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் தோல்வியை சந்திக்கக்கூடும் என்று பைடனுக்கு அவரது பிரச்சாரக் குழுவைச் சேர்ந்தவர்கள் அனுப்பிய கடிதம் ஒன்றில் எச்சரித்துள்ளனர்.

கல்வித் திணைக்களத்தின் திட்டமிடல், மதிப்பீடு மற்றும் கொள்கை மேம்பாட்டு அதிகாரியான தாரிக் ஹபாஷ் கல்விச் செயலாளர் மகுவேல் கார்டோனாவுக்கு அனுப்பி இருக்கும் கடிதத்தில், "அப்பாவி பலஸ்தீனர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் கொடுமைகள் தொடர்பில் நிர்வாகம் கண்மூடி இருப்பதை பார்த்து என்னால் தொடர்ந்தும் அமைதியாக இருக்க முடியாது" என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக இஸ்ரேலுக்கு கண்மூடித்தனமாக ஆதரவு வழங்குவதாகக் கூறிய முன்னாள் இராஜாங்கத் திணைக்கள அதிகாரி ஜோஷ் போல் கடந்த ஒக்டோபரில் பைடன் நிர்வாகத்தில் இருந்து இராஜினாமா செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 9,000 கைதிகளுக்கு பொது மன்னிப்பு



மியன்மாரின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 114 வெளிநாட்டவர்கள் உட்பட 9,652 கைதிகள் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய நாடுகளுடனான உறவுகளை பேணுதல் மற்றும் மனிதாபிமான ரீதியில் 114 வெளிநாட்டு கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்படுவதாக மியன்மார் இராணுவ ஆட்சிக்குழு தெரிவித்துள்ளது.

அதேவேளை சிறைகளில் இருந்து விடுவிக்கப்படும் வெளிநாட்டவர்கள் மியன்மாரில் இருந்து நாடு கடத்தப்படுவார்கள் எனவும் அந்த தகவல்கள் மேலும் கூறுகின்றன.

## கப்பலை மீட்ட இந்திய கடற்படை



சோமாலியா கடற்பகுதியில் கடற்கொள்ளையர்களால் கடத்திச் செல்லப்பட்ட வணிகக் கப்பலில் இருந்து மாலுமிகள் குழுவை மீட்பதில் இந்திய கடற்படையின் கமாண்டோக்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

சோமாலியாவின் துறைமுக நகரமான அய்லில் ஆயுதமேந்திய குழுவினால் லிலா நோபோக் என்ற கப்பல் கடத்தப்பட்டதாக பிரிட்டிஷ் கடல்சார் ஏஜென்சிக்கு ஒரு துயரச் செய்தி அனுப்பப்பட்டது.

அதன்படி, இந்திய கடற்படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில், லைபீரிய கொடியுடன் பயணித்த இந்த கப்பல் காப்பாற்றப்பட்டது. 21 பேர் கொண்ட கப்பலில் 15 இந்தியர்கள் உள்ளனர்.

## பிரித்தானியாவில் புதிய விசா கட்டுப்பாடுகள்




2024 ஜனவரி மாதம் முதல் அமுலுக்கு வரும் வகையில் புதிய விசா கட்டுப்பாடுகளை பிரித்தானிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

பிரித்தானியாவில் கல்வி பயிலும் வெளிநாட்டு மாணவர்கள், தங்கள் விசாவில் இனி தங்களது குடும்பத்தினரை அழைத்துச் செல்ல முடியாது என அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது. மாணவர் விசாவை பயன்படுத்தி பலர் பிரித்தானியாவில் வேறு பணிகளுக்காக நுழைவதை தடுக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய விசா கட்டுப்பாடுகள் இந்த மாதம் முதல் அமுலுக்கு வரும் எனவும், இதன் மூலம் பிரித்தானியாவுக்கு சுமார் ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேரின் வருகை குறையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் பிரித்தானிய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த விதியிலிருந்து முதுகலை ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் அரசு நிதியுதவி பெறும் மாணவர்களுக்கு விலக்கு அளிக்கப்படுவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

# இலங்கையில் ஒளியியல் மாயையுடன் கூடிய வீதி



இலங்கையில் முதன்முறையாக, ஒளியியல் மாயையுடன் கூடிய வீதிப் பகுதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் அதுல சேனாரத்னவின் ஆய்வின் மூலம் ஒளியியல் மாயையுடன் கூடிய வீதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. நாவுல - எலஹெர பிரதான வீதியில் மொரகஹகந்த நீர்த்தேக்கத்திற்கு அருகில் உள்ள பகுதியில் இந்த வீதி காணப்படுகிறது.

இது தொடர்பில் முன்னாள் இராணுவ கேணல் ரத்னபிரிய பந்து பேராசிரியருக்கு தெரியப்படுத்தியதுடன், அவ்விடத்தை பார்வையிட வந்த பேராசிரியர், இலங்கையில் இவ்வாறானதொரு இடம் காணப்படுவது இதுவே முதல் முறை எனவும் கூறியுள்ளார்.

வேறு பல நாடுகளில் இதுபோன்ற இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும், தெரிவித்துள்ளார். இந்நிலையில், இந்த இடம் பார்ப்பதற்கு மேடு போல் இருந்தாலும், உண்மையில் இது ஒரு பள்ளத்தாக்கு என பேராசிரியர் விளக்கியுள்ளார்.

# சிவப்பு நிறத்திற்கு மாறிய நதி



ரஷ்யாவில் உள்ள இஸ்கிதிம்கா என்ற நதியில் தண்ணீரின் நிறம் சிவப்பு நிறத்தில் மாறியுள்ளது. இந்த நதி அந்நாட்டின் கெமரோவோ தொழில் நகரத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளது என்பதில் இருந்து இந்த மாற்றம் எதனால் நடந்திருக்கும் என்பதை ஓரளவுக்கு யூகிக்க முடிகிறது.

இதனால் மிகுந்த கவலை அடைந்துள்ள உள்ளூர் மக்கள் ஆற்றில் கால் வைக்கவே அச்சம் கொண்டுள்ளனர். நீர் பரப்பின் மீது ஏதோ ஒன்று பரவியிருப்பதாக அவர்கள் மிகுந்த பீதி அடைந்துள்ளனர்.

மொத்த நதி நீரும் சிவப்பு நிறத்தில் மாறியிருப்பது குறித்த புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வலம் வந்து கொண்டிருக்கின்றன. இதனால் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட இருக்கும் தொடர் விளைவுகள் குறித்து ரஷ்ய மக்கள் மற்றும் உலகளாவிய சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மத்தியில் மிகுந்த கவலை ஏற்பட்டுள்ளது.

காரணத்திற்கான கணிப்புகளும், விசாரணைகளும் ரஷிய சுற்றுச்சூழல் அதிகாரிகள், இஸ்கிதிம்கா நதியின் மாசுபாடு குறித்து நடத்திய முதற்கட்ட விசாரணையில், நதியில் அடைபட்டுள்ள கழிவுப் பொருள் காரணமாக இது ஏற்பட்டிருக்கலாம் என்று கருதுகின்றனர்.

இதுகுறித்து கெமரோவோ நகரத்தின் துணைநிலை ஆளுநர் ஆண்ட்ரே பனோவ் கூறுகையில், "மாநகரின் மழைநீர் கால்வாயில் இருந்து ஏதேனும் பொருள் கலந்து, நதியின் நிறம் இவ்வாறு மாறியிருக்கலாம்" என்று தெரிவித்தார். எனினும், இதற்கு மிகச் சரியான காரணம் என்ன என்பது குறித்து இதுவரை உறுதி செய்யப்படாத நிலையில், அது குறித்து தொடர் விசாரணை நடைபெற்று வருகிறது.

முன்னதாக, கடந்த 2020ஆம் ஆண்டிலும் இதே ரஷிய நாட்டில் டீசல் சேமிப்புக் கிடங்குகளில் இருந்து வெளியான டீசலால் சைபீரியன் நகரத்திற்கு அருகாமையில் உள்ள ஆர்டிக் நதிகளிலும் இதுபோலவே ரத்தச் சிவப்பு நிறத்திற்கு தண்ணீர் மாறியிருந்தது.

அந்த சமயத்தில் தண்ணீரில் 15,000 டன் டீசலும், நிலத்தில் 6 ஆயிரம் டன் டீசலும் கலந்தது. அதைத்தொடர்ந்து, அதனை தேசிய பேரிடர் என்று ரஷிய அதிபர் விளாதிமிர் புதின் அறிவித்தார். தற்போது மீண்டும் ஒருமுறை அதேபோன்ற பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தொழிற்சாலைகளில் நடக்கின்ற அலட்சியம் அல்லது விபத்து காரணமாக சுற்றுச்சூழலுக்கு ஏற்படுகின்ற ஆபத்தின் வீரியத்தை உணர்த்துவதாக இந்த நிகழ்வுகள் பார்க்கப்படுகின்றன.

# சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்த பூங்கா

உலகின் பல்வேறு நாடுகளில் வேவ்வேறு விதமான பூங்காக்கள் உள்ளன. இந்த பூங்காக்களில் மரம், செடி, கொடி என பல வகையான தாவரங்கள் இருக்கும்.

எனினும், உலகின் மிகச்சிறிய பூங்கா எனும் கின்னஸ் சாதனையை படைத்த பூங்காவில் ஒரே ஒரு செடி மாத்திரம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. "மில் எண்ட்ஸ் பார்க்" (Mill Ends Park) எனப்படும் பூங்கா உலகின் மிகச்சிறிய பூங்காவாக பெயரிடப்பட்டுள்ளதாக கின்னஸ் உலக சாதனை அறிக்கை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் ஓரிகானில் உள்ள போர்ட்லேண்டில் இந்த பூங்கா அமைந்துள்ளது. முதன்முதலில் 1948 ஆம் ஆண்டில் மில் எண்ட்ஸ் பார்க் பூங்காவாக அறிவிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து, 1976ஆம் ஆண்டில், இந்த பூங்கா உலகின் மிகச்சிறிய பூங்காவாக கின்னஸ் உலக சாதனையில் இடம்பெற்றது.

மில் எண்ட்ஸ் பார்க் என்று பெயரிடப்பட்ட இந்த சிறிய பூங்கா 1946 இல் டிக் ஃபேகன் என்பவரால் நிறுவப்பட்டது.

இராணுவத்தில் பணியாற்றிய டிக் ஃபகன், இரண்டாம் உலகப் போரின் நிறைவில் ஓரிகானுக்குத் திரும்பினார்.

இதனை தொடர்ந்து, ஓரிகான் ஜர்னலில் பத்திரிகையாளராகப் பணியாற்றினார். இதன்போது, அவரது அலுவலகத்துக்கு முன்பாக மின்விளக்கு கம்பம் நடுவதற்கு குழி தோண்டப்பட்டிருந்தாலும், நீண்ட நாட்களாக குறித்த இடத்தில் மின்விளக்கு கம்பம் அமைக்கப்படவில்லை.

இந்த நிலையில், குறித்த இடத்தில் டிக் ஃபகன் பூச்செடி ஒன்றை நட்டார். இதையடுத்து, பூங்காக்கள் தொடர்பில் அவர் மில் எண்ட்ஸ் எனும் பெயரில் பத்திரிகைக்கான கட்டுரைகளை எழுத ஆரம்பித்தார்.

இந்த பின்னணியில், ஒரே ஒரு செடியைக் கொண்ட இந்த பூங்கா மில் எண்ட்ஸ் என பெயரிடப்பட்டது. இந்த சிறிய பூங்கா, 2 அடி அகலத்தில் அமைந்துள்ளதோடு, இதன் மொத்த பரப்பளவு 452 சதுர அங்குலங்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 07.01.2024 அன்று வெளியிடப்பட்டது.